Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 01 ஆம் நாள் (18.10.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 18

கொழும்பா..? யாழ்ப்பாணமா..?
50 நிமிடங்களில் பயணம்...
FLY
LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
பயணக்கட்டணம்
ரூபா 1,999/= மட்டுமே.
(சி-052) Hotline - 0777-382343, 072-401423.

# பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்த ரணில் தீர்மானம்

## உறுதியான முடிவுகளுக்கு பெரும்பான்மை தேவையாம்



(கொழும்பு நிருபர்)

**பாராளுமன்றத்தை இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் கலைத்துவிட்டு புதிய பொதுத்தேர்தலை நடத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முடிவு செய்துள்ளதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலமாக தெரியவந்துள்ளது.**

இனப்பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளுக்கு தனது அரசு உறுதியான தீர்வு எடுக்க பொதுமக்களின் அமோக ஆதரவு வேண்டும். அதற்கு புதிய தேர்தலே மாற்றுவழி எனத் தாம் உணர்ந்து கொண்டுவிட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு நெருக்கமான அமைச்சர்கள் சிலரிடம் கூறியுள்ளார்.

தற்போதைய பாராளுமன்றத்தில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சிக்கு ஓடிய படையினரை மூர்க்கத்தனமாக தாக்கிய பன்றி

(சரசாலை)

வீதியில் பயிற்சியில் ஈடுபட்ட படைச் சிப்பாய் பன்றியின் தாக்குதலுக்கு இலக்காகி காலில் படுகாயம் அடைந்த சம்பவம் நேற்றுக்காலை மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

காலையில் பயிற்சிக்காக வீதியில் மூன்று படையினர் ஓடிக்கொண்டு இருந்தவேளை அப்பகுதி வளவில் இருந்து வேகமாக வந்த பன்றி மூர்க்கமாகப் சிப்பாய் ஒருவரைத் தாக்கியதாகவும், அவ்வீதியில் பயிற்சிக்காக ஓடிவந்த பொலிஸார் பன்றியை விரட்டி சிப்பாயைக் காப்பாற்றியதாகவும் உடன் அம்புலன்ஸ் மூலமாக அவர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (34)

## புதிய தேர்தலை தவிர்க்க தேசிய நல்லிணக்க அரசு

### ஜனாதிபதி முயற்சி

(கொழும்பு)

19ஆம் அரசியல் சீர்திருத்தச் சட்டம் கைவிடப்பட்டு ரணில் அரசு புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டால் அதைத் தவிர்க்க ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுத்துவருவதாக தெரியவருகிறது. இப்படியொரு நிலை ஏற்பட்டால் தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க அவர் முயற்சிப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மாற்று அரசு அமைப்பதற்கு ஆதரவாகத் தற்போதைய அமைச்சர்களான கருஜெயசூரிய, லொக்கு பண்டார ஆகியோரின் உதவியை ஜனாதிபதி நாடுவார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

## நிமலராஜன் அஞ்சலிக் கூட்டம்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ம.நிமலராஜனின் இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். ஊடகவியலாளர் சங்கமும் சர்வதேச மாணவர் பேரவையும் இணைந்து நடத்தும் இக்கூட்டத்தை நடத்தவுள்ளன.

### விண்ணாணம் விநாசியர்



பாவம் பண்டி... அதுக்கு போர் நிறுத்தம் எண்டு தெரியாதாக்கும்.

## உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நவம்பரில் நோர்வேயில் நடக்கும்

எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

பிரதமருடன் அமைச்சர்கள் மிலிந்த மொறகொட அல்லது ஜி.எல்.பீரிஸ் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த முறையை விட இம்முறை இலங்கைக்கு கூடுதல் நிதியுதவி கிடைக்குமெனவும், வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான வெளிநாட்டு நிதியை அரசும் புலிகளும் இணைந்த குழுவே கையாளும் என்பதால் வெளிநாடுகள் கூடுதல் நிதியை இம்முறை வழங்க முன்வந்துள்ளன எனவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## தமிழ்க் கூட்டமைப்பினர் பாலாவை சந்திக்க முயற்சி

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வந்துள்ளதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரைச் சென்று சந்திக்கவுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுக்களை நடத்துவதற்காக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்னிக்குச் செல்வார்கள் எனவும்,

எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள், சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்து இச்சந்திப்பின்போது

(10ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிக் கட்டணம் டிசெம்பரில் உயரும்

சகல தொலைபேசிக் கட்டணங்களும் டிசெம்பர் முதலாம் திகதி முதல் 15 சதவீதத்தினால் அதிகரிக்கும்.

கடந்த ஆண்டுக்கான 21 சதவீதக கட்டண உயர்வு இவ்வாண்டு மே மாதத்திலேயே அமுலாக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## அரசு - புலிகள் கூட்டு குழு ஜனவரி முதல் செயற்படும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியைக் கையாள்வதற்கான அரசு - புலிகள் கூட்டுக் குழு அடுத்தாண்டு தை மாதம் முதல் இயங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழு வடக்கு - கிழக்கின் சகல அபிவிருத்தியையும் கையாளும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய கூட்டுக் குழுவை அமைப்பதற்கான முடிவு கடந்த செப்ரெம்பரில் தாய்லாந்தில் நடந்த அரசு - புலிகள் பேச்சுக்களின்போது எடுக்கப்பட்டமை தெரிந்ததே.

## யாழ். அபிவிருத்திக்கு 106 மில்லியன் ரூபா பிரதமரிடம் நேரடி உதவிக்கு கோரிக்கை

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கென 106 மில்லியன் ரூபா நேரடி உதவியைத் தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியிருப்பதாக இந்து சமய விவகார அமைச்சரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.


இது தொடர்பாக நமது ஈழநாட்டுக்கு அவர் மேலும் தெரிவிக்கும் போது -

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கென இவ்வாண்டு அமைச்சுக்கள் எதுவும் நேரடியாகப் பணம் ஒதுக்கவில்லை. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு துறைகளும்

(10ஆம் பக்கம் பார்க்க)

### மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

## திருமாவளவன், இன்குலாப் உள்ளிட்ட தமிழகப் பிரமுகர்கள் யாழ்.வந்தனர்!



திருமாவளவன்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், நிதர்சனம் நிறுவனத்துடனும், தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடத்தவுள்ள 'மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2002' நிகழ்ச்சியில் சிறப்புப் பேச்சாளர்களாகப் பங்கேற்க தமிழகத்தில் இருந்தும் பலர் வருகை தந்துள்ளனர். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினருமான இரா.திருமாவளவன், கவிஞர் இன்குலாப், ஓவியர் மருது, 'காற்றுக்கென்ன வேலி' புகழ் இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர். தமிழகத்தின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இவர்களின் வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே கருதப்படுகின்றது.

"மானுட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழர் உரிமைப் போராட்டமும், கலை - இலக்கிய ஊடகங்களின் வகிபாகமும்" என்னும் அடிப்பொருளில் இம்மாநாடு

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஜோர்ஜ் டபிள்யூ புஷ் - ஏரியல் ஷரோன் திடீர் சந்திப்பு

## ஈராக் மற்றும் பலஸ்தீன விவகாரங்கள் ஆராயப்பட்டன


புஷ்

(வொஷிங்டன்) இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஈராக் மீதான போர் வெடித்தால் இஸ்ரேல் தாக்கப்படுமென அமெரிக்கா எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

இவ்வாறான ஒரு கட்டத்தில் இஸ்ரேல் நிலைமைகளை எவ்வாறு கையாளலாம் என்பது பற்றிய பேச்சுக்கள் இடம்பெற்றன.

மேலும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இஸ்ரேல் திடமான முறையில் சமாதானத்தை மீட்டுக் கொள்ள எவ்வாறு பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பது பற்றியும் இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனத் தலைவர் மீது மேற்கொண்டிருந்த முற்றுகை, புஷ் விடுத்த வேண்டுகோளை அடுத்து ஷரோனால் நீக்கப்பட்டது.

ஈராக் போர் வெடிக்கும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதனால் இஸ்ரேல்-பலஸ்தீன உறவைச் சீர்குலைத்து முஸ்லிம்களின் எதிர்ப்பை மேலும் கடுமையாகச் சம்பாதிக்க அமெரிக்கா விரும்பவில்லை என மத்திய கிழக்கின் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.


ஷரோன்


வைரம் ஏறிய வரலாறு!

# அஞ்சலி நிகழ்வில் அவுஸ்திரேலியப் பிரதமர் ஹவாட் கலந்துகொண்டார்

அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் இந்தோனேசியாவின் பாலித்தீவுக்கு சென்றுள்ளார்.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட தமது நாட்டுப் பிரஜைகளின் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

ஐ.நா.சபையில் இடம்பெறும், ஈராக் மீதான தாக்குதல் பற்றிய விவாதத்தில் அமெரிக்க நிலைப்பாட்டை அவுஸ்திரேலியா ஆதரிக்கும் நிலையில் இருந்தது என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பெருமளவு மௌனப்போக்கைக் கடைப்பிடித்த அவுஸ்திரேலியா இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுக்குச் செல்லும் நிலையை பாலித்தீவுக் குண்டு வெடிப்பே ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக் மீது இராணுவ நடவடிக்கை தேவையில்லை ஐ.நாவில் முஸ்லிம் நாடுகள் வலியுறுத்தல்

(நியூயோர்க்) ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் முஸ்லிம் நாடுகள் ஒருமித்த குரலில் அமெரிக்காவின் ஈராக் மீதான இராணுவத் தாக்குதல் திட்டத்தை எதிர்த்தன.

"இஸ்ரேலும் அணுவாயுதம், உயிரியல் ஆயுதம், இரசாயன ஆயுதம் ஆகியவற்றை வைத்திருக்கிறது. ஈராக் ஆயுதப் பரிசோதனைகளை நிபந்தனையின்றி அனுமதிக்க விரும்பும் போது போர் அர்த்தமற்றது. எந்த நாடும் ஐ.நாவுக்கூடாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஐ.நாவுக்கு வெளியே நடவடிக்கை எடுத்தல் சர்வதேச சட்டங்களை மீறுவதாக அமையும்" என ஐ.நாவுக்கான அரபுலீக் தூதுவர் சியாகில் முஹமட்சாலி தெரிவித்தார்.

"ஈராக்கில் நிலைகொள்வதற்காக தனக்கு 'வெற்றுக் காசோலை' (Blank Cheque) ஒன்றை வழங்குமாறு ஐ.நாவை அமெரிக்கா கேட்கிறது, ஈராக்கில் மட்டுமல்ல மத்திய கிழக்கு எங்கும் நிலைகொள்வதே அமெரிக்காவின் நோக்கம்" என்று ஈராக்கினுடைய ஐக்கிய நாடுகளுக்கான தூதுவர் முஹமட் அல் டோறி தெரிவித்தார்.


ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதத்தில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகள்.

# வடகொரியாவிடம் இரகசிய அணுவாயுதத் திட்டம் உள்ளது!

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வோஷிங்ரன்) வடகொரியா இரகசியமான திட்டமொன்றின் மூலமாக அணுகுண்டுத் தயாரிப்புக்கு முயற்சிக்கிறது என அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது.

1994ஆம் ஆண்டு அமெரிக்காவும் வடகொரியாவும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி அணுவாயுதத் திட்டத்திற்கு அணுவாலைகளைப் பயன்படுத்தும் திட்டத்தை வடகொரியா கைவிடுவது என்றும் சாதாரண சக்தித் தேவைகளுக்கு அணுச்சக்தியை பயன்படுத்துவதற்குரிய அணு உலைகளை அமெரிக்கா அமைத்துக் கொடுப்பது என்றும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

தன்னிடம் இரகசிய அணுவாயுதத்திட்டமொன்று இருக்கிறது என்பதை வடகொரியா ஏற்றுக் கொண்டுள்ளது எனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

பட்டினி கிடந்து சாகும் நிலையில் வடகொரிய மக்கள் காணப்படுகின்றனர் என்றும் அதற்கிடையில் இவ்வாறான இரகசிய விடயங்களில் அந்நாடு ஈடுபடுகிறது என்றும் வடகொரியாவில் பணியாற்றிய அமெரிக்க தூதுவர் ஒருவர் தெரிவித்தார்..

### கஷ்மீரில் காங்கிரஸ் ஆட்சி?

ஜம்மு - கஷ்மீர் சட்டசபைத் தேர்தலையடுத்து வெற்றி பெற்ற கட்சிகள் விரைவில் தமது தீர்மானங்களை எடுக்கவேண்டும் என ஆளுநர் கேட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சி தான் ஆட்சியமைக்க விரும்பினாலும் பல விடயங்கள் இன்னமும் பேரம் பேசப்படுகின்ற விடயங்களாகவே உள்ளன என்று செய்திகள் தெரிவித்தன.

# பாக். இஸ்லாமியக் கட்சிகள் விட்டுக்கொடுப்புக்குத் தயார்

(இஸ்லாமாபாத்) பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியுள்ள இஸ்லாமியக் கட்சிகளின் கூட்டுத் தலைவர்கள் தமது தீவிர நிலைப்பாடுகளை விட்டுக்கொடுத்து முஷராவ் ஆதரவு கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் சாத்தியங்கள் உள்ளதாக தெரிய வருகின்றது.

எனினும் புதிய பாராளுமன்ற ஆட்சி தனது வடிவத்தைப்பெற மேலும் இரு வாரங்கள் செல்லும் என இஸ்லாமிய கட்சிகளின் கூட்டுத் தலைவர் கூறினார்.

# 12 வருடங்களுக்குப் பின் மண்டைதீவு ஓடையில் மீன்பிடி

பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக மீன்பிடிக்க அனுமதிக்கப்படாத பகுதிகளில் நேற்று மண்டைதீவு மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டனர். நேற்றுக்காலை 9 மணிக்கு மண்டைதீவின் வடபகுதியில் உள்ள ஆழங்குறைந்த ஓடைப்பகுதிகளிலேயே இவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர்.

வள்ளங்கள் மிதக்க முடியாத ஒடுங்கிய இந்த ஓடைக்கடல்களில் மீனவர்கள் வீச்சுவலை கொண்டு மீன்பிடியில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. அல்லைப்பிட்டி வீதிக்கும் மண்டைதீவின் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட பகுதிகளிலேயே இவர்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

மீன்பிடிக்கும் எல்லைப்பரப்பு சிவப்புக் கொடிகள் கட்டப்பட்டு வரையறுக்கப்பட்டிருந்தது. இந்தத் தீவின் பிரதான வீதிக்கும் கிழக்கே அமைந்துள்ள கம்பிவேலிக்கும் இடைப்பட்ட பகுதிகள் மீன்பிடிக்கு அனுமதிக்கப்படவில்லை.

ஆழங்குறைந்த இந்தக்களப்புப் பகுதிகள் நண்டு, இறால், மட்டி போன்ற மீன்வளம் நிறைந்தவையாகும்.

மண்டைதீவின் மீன்வர் சங்கத்தின் கோரிக்கையின்பேரிலேயே இந்த அனுமதி கிடைத்ததாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# போட்டியிட்ட அரச ஊழியரை கடமைக்குத் திரும்ப அழைப்பு!

(நமது நிருபர்) 2002ற்கான உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக - சம்பளமற்ற விடுமுறையிற் சென்ற சகல அரச ஊழியர்களையும், கடமைக்கு திரும்பும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டபோது - இத தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிடும் அரச ஊழியர்கள் சம்பளமற்ற விடுமுறையில் சென்றிருந்தனர்.

எனினும் உள்ளூராட்சித் தேர்தல பிற்போடப்பட்டுள்ளமையால் - இம் மாதம் 31ஆம் திகதி, அல்லது அதற்கு முன்னராக, விடுமுறையிற் சென்ற சகல அரச ஊழியர்களையும் கடமைக்கு திரும்பும்படியும் - இவர்கள் சம்பள விடுப்புப் பெற்ற காலப் பகுதிக்கான சம்பளப்படிகள் வழங்கப்படுமெனவும் - அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

### சொற்பொழிவு

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை 5.30 மணிக்கு சொற்பொழிவு நடைபெறவுள்ளது. சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'உலகம் உவப்ப' எனும் தலைப்பில் கலாநிதி சி.சிவலிங்கராசா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

# சென்னை டெஸ்ட் போட்டி மேற்கிந்தியா 167 ஓட்டங்கள்

(சென்னை) இந்திய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று சென்னையில் ஆரம்பமாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 79.3 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களையே பெற்றிருந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டன் கார்ல் கூப்பர் அதிகபட்சமான 35 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இந்திய அணி சார்பில் பந்து வீசிய சுழற்பந்து வீச்சாளர்கள் எட்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அனில் கும்ப்ளே 30 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுக்களையும் ஹர்பஜன் சிங் 3 விக்கட்டுக்களையும் சிறிநாத் மற்றும் ஷாகீர் கான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி விக்கட் இழப்புகள் எதுவுமின்றி 31 ஓட்டங்களை நேற்றைய ஆட்ட முடிவுவரை பெற்றிருந்தது.


தீபாவளியை முன்னிட்டு

புதிய கனன் போட்டோக் கொப்பி மெசின்

அறிமுகப்படுத்தப்படுகிறது

NP 7161 - விலை 167,000 /- + VAT + TAX

NP 1215 - விலை 155,000 /- VAT + TAX உட்பட



Canon NP 7161

பாவித்த சகலவிதமான போட்டோ கொப்பி மெஷின் ஆகக் கூடிய விலை 40.000/- ற்கும். ஆகக் குறைந்தது 10.000/- ற்கும் எங்களால் கொள்வனவு செய்யப்படுவதுடன் இதன் பெறுமதிக்கேற்ப புதிய மெஷின் (NP 7161) விலை கழிக்கப்படும்.

நவகலா

Metro Politan Agent

200, K.K.S. Road, யாழ்ப்பாணம்.

(சி-064)



சிறு விளம்பரம்

வாடகைக்கு

இல. 172 (254), K.K.S. வீதியிலுள்ள மாடிக்கடை வாடகைக்கு விடப்படும். *தொடர்புகளுக்கு:* **அ. அலக்ஸிஸ்,** ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், சமாதான நீதிவான், இல.18, புதுமை மாதா கோவில் கிழக்கு வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2223358. (015)



கராட்டி வகுப்பு

A.O.M.Aஇன் புதிய மாணவர்களுக்குரிய வகுப்புகள் அச்சுவேலியில் தொடங்கியுள்ளன.

இடம்:- யூனியன் மைதானம் முன்பாக

| | காலை | மாலை |
|---|---|---|
| சனி / ஞாயிறு | 6.15 - 8.30 | 5.00 - 6.30 |

*ஆசிரியர்:* S.புவிராசா (3rd Dan.) Black Belt

தொடர்பு: சியன் ரேடர்ஸ், அச்சுவேலி.

(சி-065)

# புனர்வாழ்வு-புனரமைப்பு பணிகள் குறித்து துறைசார் நிபுணர்களுடன் புலிகள் பேச்சு!

(நமது நிருபர்)

வட-கிழக்குப் பகுதிகளில் செயலணிக்குழுவை அமைப்பதற்கான



ஜோய் மகேஸ்வரன்

முன்னோடி நடவடிக்கையாக வன்னியில் புலிகள் துறை சார்ந்த நிபுணர்கள், கல்விமான்களுடன் ஆலோசனை நடத்திவருவதாக தெரியவருகின்றது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் செயலணிக் குழுவை ஏற்படுத்துவதற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் வட-கிழக்குக்கான செயலணிக்குழுவில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் ஏனைய விடயங்களை எவ்வாறு கட்டமைப்புச் செய்வது என்பது குறித்து ஆராய்வதற்காக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் துறைசார் நிபுணர்கள் கல்விமான்களைப் புலிகள், வன்னிக்கு அழைத்துள்ளதாக தெரியவருகின்றது.

கட்டம் கட்டமாக இவர்களுடன் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்துரையாடி வருகின்றனர். குறிப்பாக புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள் குடியேற்றம் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய கல்விமான்கள், நிபுணர்களுடனான ஆலோசனைகள் அதிகமாக இடம்பெற்று வருகின்றன.

முதலாம் கட்டச் சமாதானப் பேச்சுக்களில் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவராக கலந்துகொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொருளாதாரக்கட்டுமான நிபுணத்துவ ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனும் தற்போது வன்னியில் தங்கியுள்ளார்.

புனரமைப்பு, மீள் குடியேற்றம், அபிவிருத்தி தொடர்பான செயல் திட்டங்களை ஏனைய துறைசார் நிபுணர்களுடன் இணைந்து வகுக்கும் நோக்குடனேயே ஜோய் மகேஸ்வரன் வன்னிக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவரைவிட மேலும பலர் வெளிநாடுகளில் இருந்து வன்னிக்கு வந்து தமது துறைசார் ஆலோசனைகளை வழங்கியிருப்பதாகவும், இன்னும் பலர் வரவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அதிகளவில் வெங்காயம் பயிரிடும் யாழ்.விவசாயிகள்

(வலி-கிழக்கு)

தரைப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து யாழ்.குடாநாட்டில் வெங்காயத்தின் விலை அதிகரித்ததோடு வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கொழும்பு மொத்த விற்பனை நிலையங்களில் சிறிய வெங்காயம் 20 ரூபாவிலிருந்து 35 ரூபாவாக உயர்ந்துள்ளதோடு பெரிய வெங்காயம் 30 ரூபாவிலிருந்து 45 ரூபாவாக உயர்ந்துள்ளது.

இவ்விலை அதிகரிப்பினால் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் விவசாயிகள் இம்முறை அதிகளவில் வெங்காயத்தைப் பயிடுவதைக் காணமுடிகின்றது. (76)

## வட-கிழக்கின் கட்டட நிர்மாணத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான காலம் வந்துள்ளது!

### கைத்தொழில் வர்த்தகத் தலைவர் சரத் விக்கிரமசிங்க

வடக்கு - கிழக்கு கட்டட நிர்மாண நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான காலம் வந்துவிட்டது என இலங்கை கட்டட நிர்மாண கைத்தொழில் வர்த்தக சபையின் தலைவர் சரத் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கும்போது - மகாவலி அபிவிருத்தி திட்டம், சுதந்திர வர்த்தக வலயம், வீடமைப்புத்திட்டம், சிறி ஜெயவர்த்தனபுர அபிவிருத்தித்திட்டம் போன்ற திட்டங்கள் கடந்த காலங்களில் கட்டட நிர்மாணத் துறையின் முன்னேற்றத்திற்கு பேருதவியாக அமைந்தன. ஆனால் அண்மைக்காலமாக இவ்வாறான திட்டங்களில் அரசு கவனம் செலுத்தவில்லை எனத்தெரிவித்த அவர் - ஏனைய நாடுகளின் கட்டட நிர்மாணத்துறை முன்னேற்றம் அடைந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இரு வருடங்களில் 2 லட்சம் அகதிகள் சொந்த வீடுகளில் குடியமர்த்தப்படுவர்

### அமைச்சர் ஜயலத் கூறுகிறார்

அடுத்த இரண்டு வருட காலத்துக்குள் சுமார் 2இலட்சம் அகதிக்



குடும்பங்களை அவர்களது சொந்த வீடுகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமென புனர்வாழ்வு அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

ஏறாவூர்ப் பிரதேசத்தில் ரூகம் கிராம அகதிகளுக்கென அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தினை அவர் பார்வையிடச் சென்றிருந்த போது இவ்வாறு தெரிவித்திருந்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் சுமார் எட்டு லட்சம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் உள்நாட்டிலும், இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிலும் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்கள், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்திருந்த அவர் - இவர்களில் இரண்டு லட்சம் பேரை இரண்டு வருடங்களுக்குள் சொந்த வீடுகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## ஜயலத்தின் கிழக்குமாகாண இணைப்பாளராக அலிசாஹிர்!

புனர்வாழ்வு அகதிகள் விவகார அமைச்சின் கிழக்கு மாகாண இணைப்பாளராக கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாஹிர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனத்தை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா வழங்கியுள்ளார்.

அலிசாஹிர் மௌலானா முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முறிகண்டிப் பிள்ளையார் சூழல் புதிய நகரமாக்கத் திட்டம்!

(கிளிநொச்சி)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முறிகண்டிப் பிள்ளையார் ஆலயச்சூழலை நவீனவசதிகள் கொண்டதாக அபிவிருத்தி செய்ய திட்டமொன்று முன்வைக்கப்படவுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. இரண்டு கோடியே இருபத்திநான்கு இலட்சத்து எழுபத்தினாயிரம் ரூபா செலவாகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அபிவிருத்தித்திட்டத்தின்படி குறிப்பிட்ட ஆலயம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதைவிட ஆலயச்சூழலில் பல கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்படி மணிக்கோபுரம், யாகசாலை, களஞ்சியம், தேவஸ்தானப் பணிமனை, திருமஞ்சனக் கிணறு, பொங்கல் மண்டபம் என்பன புதிதாக அமைக்கப்படவுள்ள தோடு மூலவர் இருப்பிடம் விஸ்தீரணமான முறையில் மாற்றி அமைக்கப்படவுள்ளதாக செலவுத்திட்டங்கள் மதிக்கப்பட்டிருக்கின்றன.

எனினும் இதற்கான நிதி ஒதுக்கீடுகள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் இதற்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றதும் கட்டட நிர்மாணப்பணிகள் துரிதமாக நடைபெறும் எனவும் தெரியவருகிறது.

## கடற்தொழிலுக்கு நவீன உபகரணங்கள்; நடவடிக்கை எடுப்பதாக ரணில் உறுதி!

(கொழும்பு)

பாரம்பரியமாக கடற் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களுக்கு நவீன உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ உள்ளரங்க விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடத்தப்பெற்ற தேசிய மாநாட்டில் பேசும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மீன்பிடித் தொழிலை நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம் எனவும் இதனை மேற்கொள்ளாது விட்டால் இலங்கையில் மீன்பிடித்தொழில் அழிந்துவிடும் எனவும் அங்கு அவர் தெரிவித்திருந்தார்.

இந்த மாநாட்டில் கடற்தொழில் துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர பேசும்போது - 2008ஆம் ஆண்டளவில் இலங்கை இந்து சமுத்திரத்தின் கடற்தொழில் கேந்திர நிலையமாக அமையும் என கடற்தொ



ழில்துறை அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## மட்டு. நகர அரச கட்டடங்களிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்!

### அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஜயலத்திடம் மகஜர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் இதுவரை அகற்றப்படாத வீதித்தடைகளை அகற்றுமாறும் மாநகரசபை எல்லைக்குள் உள்ள அரச கட்டடங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும் என்றும் மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்றும செவ்வாயன்று இணையத் தலைவர் அ.செல்வேந்திரனால் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

லேடி மெனிங்டிரைவ வீதி, எல்லை வீதி, 3ஆவது குறுக்கு வீதி, லேக் வீதி, தேவாலய வீதி ஆகியவற்றில் வீதித் தடைகள் அகற்றப்படவில்லை.

மாநகர சபைக் கட்டடம், வை.எம்.எச்.ஏ. கட்டடம், விருந்தினர் விடுதி, வெபர் மைதானம், அரசடி நூலகம் ஆகியவற்றிலிருந்து படையினர் வெளியேறவில்லை. இவற்றை விட்டு வெளியேற நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### புன்னாலைக் கட்டுவன் - குப்பிளான் பகுதிகளில்

## மின்கம்பங்கள் நாட்டப்பட்டும் மின்சார விநியோகம் இல்லை!

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் ஆகிய பகுதிகளில் மின்சாரம் வழங்குவதற்கான மின்கம்பங்கள் ஆறுமாதங்களிற்கு முன்னரே நாட்டப்பட்ட போதிலும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இப்பகுதி மக்கள் வீட்டு மின் இணைப்பு வேலைகள் முடித்துவிட்டு - கடந்த சில மாதங்களாக காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.(83)



யா/இராமநாதன் கல்லூரியில் ஆசிரியர் தினம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஈழவேந்தன் சிறப்புரையாற்றுவதனையும், மேடையிலே கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம்.

## ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபன ஊழியருக்கு ஐந்து வருடச் சம்பளம் வழங்கப்படவில்லை!

(கரணவாய்)

ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய ஊழியர்களுக்கான - 5 வருடக் கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படாமல் உள்ளது.

கடந்த 10 வருடங்களிற்கு மேலாக வன்செயல்களினால் இயங்காத நிலையில் இருந்த போதிலும், 5 வருடத்திற்கான சம்பளக் கொடுப்பனவுகள்- தாமதமாகவே வழங்கப்பட்டுவந்தன.

இந்நிலையில் ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம் மீளவும் புனரமைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிப்பது பற்றியும், ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் - கடந்த இரண்டு மாதங்களிற்கு முன்னர் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் ஊழியர்களுக்கான 4 வருட சம்பளக் கொடுப்பனவுக்கான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதெனவும், திறைசேரிக்கு பணம் கிடைத்தவுடன் சம்பளம் வழங்கப்படும் எனவும் முதிர் நிலை அலுவலர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு தெரிவித்தும் 2 மாதங்களாகியும் இதுவரை அக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(22)

# உணர்வோடு கலந்து ஒன்றாகி நின்றாய்! நீ ஊடகமல்ல, உயிரோடு கலந்தாய்!!


மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் (யாழ். ஆயர்)


அருட்திரு.ஏ.ஜி.ரட்ணகுமார்


அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை


அருட்திரு.ஏ.பி.பெனடிக்ற் (சாந்தோம் கலைத்தொடர்புகள் நிலைய இயக்குநர்)


மேதகு. பியாற்றோ வான்தாய் (வெரித்தாஸ் வானொலி நிலைய இயக்குநர்)


அருட்திரு.ஏ.சிங்கராயன் (வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பிரிவு ஒருங்கிணைப்பாளர்)

## வெரித்தாஸ் வானொலியின் "உறவுகளின் சங்கமம்"

வெரித்தாஸ் வானொலியின் உறவுகள் சங்கமம் நிகழ்வு நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்.மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக் குழு இயக்குநர் அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை தலைமைதாங்கினார்.



யாழ்.ஆயருக்கு வெரித்தாஸ் வானொலி ஒருங்கிணைப்பாளர் ஏ.சிங்கராயன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.

நிகழ்வுகளின் ஆரம்பமாக யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் மங்களவிளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

இறைவணக்கத்தைத் தொடர்ந்து அறிமுக உரையினை யாழ்.மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக் குழுவின் இயக்குநர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளையும், திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்திரு.ஏ.ஜி.ரட்ணகுமாரும் நிகழ்த்தினார்கள்.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவற்றைத் தொடர்ந்து சென்னை சாந்தோம் கலைத்தொடர்புகள் நிலைய இயக்குநர் அருட்திரு ஏ.பி. பெனடிக்ற் உரைநிகழ்த்துகையில், வெரித்தாஸ் வானொலியின் உறவிலே இணைக்கப்பட்டு கண்குளிர நாம் கண்டுகொண்டிருக்கும் இக் காட்சிகளை இந்தியாவில் மெய்சிலிர்க்கச் சொல்லப்போகும் நாட்களுக்காக ஏங்கிக்கொண்டுள்ளேன்.

கண்ட காட்சிகள் அனைத்தையும், தவறாமல் நான் எடுத்துச் சொல்வேன். இன்று உணர்வுபூர்வமாக சொல்லக்கூடிய அளவிற்கு நேற்றிலிருந்து இன்றுவரை என்னுடைய இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது. காரணம், இது உண்மையின் அதிர்வுகள், உணர்ச்சியின் வேகம், கொந்தளிப்பு. நாங்களெல்லாம் இங்கிருந்துவரும் செய்திகளைக் கேட்டு அதை செய்தியாக மீண்டும் சொல்லுகின்றபோது எங்களிடையே ஓர் உணர்வலை கொதித்தெழுந்தது உண்மை. எங்கள் காதிற்கு வந்துவிட்டது என்று நாங்கள் சொல்லும் மொழியானது வானொலி மொழி. அது எப்படியிருக்கும் தெரியுமா? வானாகி, மண்ணாகி, வழியாகி, மொழியாகி, ஊற்றாகி, உயிராகி உண்மையாய் வெரித்தாஸ் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இது உண்மையின் ஒலி. காரணம் எங்கெல்லாம் கதறல்கள், எங்கெல்லாம் இரத்தங்கள் சிதறப்பட்டு, எங்கெல்லாம் உயிர்கள் உயிர்த்தெழ வேண்டும் என துடிக்கிறார்களோ அங்குதான் வெரித்தாஸ் முழக்கமிட்டுக் கொண்டிருக்கின்றது.

முப்பது ஆண்டுகளுக்கு முன் எனது வீட்டிற்கு வந்திருந்த ஓர் தமிழ்ப் பெண்ணின் தமிழைக் கேட்டதிலிருந்து எனக்குத் ஈழத்தமிழ் மக்கள் மீது, யாழ்ப்பாணத்தின் மீது பாசம் நிறைந்துவிட்டது. நான் சொல்வது உண்மை. இந்த உண்மையை உணர்வோடு கலந்து சொல்லவேண்டும். ஈழத்தமிழர்களின் வாழ்க்கை சீரழியக்கூடாது. மாறாக முறிந்த எலும்புகளெல்லாம் மீண்டும் உயிர்பற்றி எழவேண்டும். கசங்கிப் போனவர்களெல்லாம் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும் என்ற ஆதங்கம் தான் சாந்தோம் கலைத்தொடர்பு நிலையத்திற்கு உள்ளது.

இந்த நாளில் நான் உங்களைப் பார்க்கும்போது பரவசமடைகின்றேன். நேற்று நான் பார்த்த காட்சியை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. காரணம் அதிகாலை 6 மணிக்கு நாங்கள் புறப்பட்டு வந்து கொண்டிருக்கும்போது இடதுபுறமும், வலதுபுறமும் கண்ட காட்சிகள் அனைத்தும் இது எப்படி நடந்தது என்றும், ஏன் நடந்தது என்றும், இப்படியான கேள்விக்கெல்லாம் நாம் பதில் தேடவில்லை. மாறாக இங்கு வாழ்ந்த மக்கள் எப்படியிருக்கிறார்கள்? இங்கு பிறந்த குழந்தைகள் எங்கே போனார்கள்? இவர்களுக்குத் எப்போது சுதந்திரக் காற்று வீசப்போகின்றது? எப்போது இங்கு மடிந்த புற்களும், மரங்களும், கனிகளும், காய்களுமாய் வளரப் போகின்றன? என்பதுதான் எமது ஏக்கம்.


நிகழ்வில் கூடியிருந்த பாடசாலை மாணவர்கள்

நாம் 25 ஆண்டுகளுக்குப் பின் இங்கு வந்திருக்கின்றோம் என்றால், 25 ஆண்டுகளும் உங்களை எங்கள் உள்ளத்தில் சுமந்திருக்கின்றோம் என்பதுதான் உண்மை.

இந்நேரத்தில் ஒன்றைமட்டும் உங்களுக்குச் சொல்கின்றேன். உங்களுக்கு சமாதானம் நிச்சயம் கிடைக்கப்போகின்றது. காரணம் உலகில் பிறந்த ஒவ்வொருவரும் சமாதானத்திற்காகத்தான் ஏங்குகிறார்கள். இந்த சமாதானத்திற்கான வழியை, சமாதானத்திற்கான முறைகளை எங்களுடைய வானொலி வழியாக எடுத்துரைப்போம். உங்களோடு நாம் என்றும் இருப்போம் என்றார்.

இதனைத் தொடர்ந்து வெரித்தாஸ் வானொலி நிலைய இயக்குநர் மேதகு பியாற்றோ வான்தாய் அடிகள் உரை நிகழ்த்தினார். இதில் அவர் தெரிவிக்கையில் - எனக்குத் தமிழ் மொழி பேசத்தெரியாது. ஆனால் பேசப்படும் தமிழ்மொழியை எனது உள்ளத்தால் உணர்ந்து கொள்வேன். நான் நீங்கள் எதிர் கொள்ளும் போராட்டங்களையும், சவால்களையும் நன்கு அறிந்து வைத்துள்ளேன். வெரித்தாஸ் 17 மொழிகளில் சேவைகளை நடத்துகின்றது. ஒவ்வொரு மொழி ஒலி பரப்பும் தமக்குரிய பிரச்சினைகளைப் பேசும். நாம் இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண ஆர்வமாக இருக்கின்றோம். நாம் இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக் கூடியவர்களாக இல்லை. ஆனால், தீர்வுகாணப்படும் பாதையில் உங்களுடன் நண்பர்களாக இருந்து செயற்படுவோம். வெரித்தாஸின் முக்கியமான பங்கு என்னவென்றால் வெவ்வேறு மொழிகள்; வெவ்வேறு குரல்கள்; ஆனால் இதயம் ஒன்று. உங்கள் இதயமும், எனது இதயமும் இணைந்தே இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

வெரித்தாஸ் தமிழ்ப்பிரிவின் ஒருங்கிணைப்பாளர் அருட்திரு. ஏ. சிங்கராயன் உரையாற்றுகையில் - முதுமையான மும்மதங்களின் இறைமணமும், வள்ளல் தமிழ்மணமும், கவியும், கலைவளமும், களங்கமில்லா வீசிக்கொண்டிருக்கும் யாழ்.நகரில் இலங்கையிலே முதன் முதலாக உறவுகள் சங்கமம் நிகழ்ச்சியை நடத்துவதையிட்டு மகிழவடைகின்றோம்.

நான் பொறுப்பேற்ற காலத்தில் எனது குடும்பத்தில் இருந்து, மறை மாவட்டத்திலிருந்து கடிதம் வருவது குறைவு. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் கடிதங்கள் அநேகம். இப்பணியை ஏற்றவுடன் எனக்கு ஏக்கம், மனதில் பயம். என்னவென்றால் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் கடிதங்கள் எல்லாம் சோகங்களையும் அவலங்களையும் சுமந்து கொண்டுவந்தன. நான் பொறுப்பேற்ற பின் சிந்திக்கின்ற போதும், செபிக்கின்றபோதும், தியானிக்கின்ற போதும் இக்கடிதங்கள்தான் என் கண்முன் வரும். எனது மனதில் இருந்த ஏக்கமெல்லாம் இந்த மக்களை நேரில் போய்ப் பார்க்க வேண்டும் என்பதே. என்னுடைய அறிவிலிருந்து உரை கொடுப்பதற்கு மாறாக, மேலெழுந்த வாரியாக உணர்வுபூர்வமற்ற செய்திகளைக் கொடுப்பதற்கு மேலாக, உங்களை நேரடியாகச் சந்தித்து உங்களுடன் என்னை ஐக்கியப் படுத்தி, என்னுடைய உடன் பிறவாத சகோதரர்களாக ஏற்றுக் கொண்டு, உங்களின் இன்பங்களையும், துன்பங்களையும் அனுபவித்துச் சென்றால்தான் இச்செய்திகள் ஓர் உண்மையான யதார்த்தமாகும்; மக்களின் உள்ளங்களை சென்றடையும். நான் பொறுப்பேற்ற மூன்று மாதங்களின் பின் நிச்சயமாக உங்களை வந்து சந்திக்க இறைவனிடம் வரம் கேட்டு தினமும் செபிப்பேன்.

விரைவாக உங்களைச் சந்திக்க நற்கருணைக்கு முன் முழந்தாளிட்டு செபிப்பேன். நான் வெரித்தாஸ் வானொலியில் தினமும் உங்களுக்காகத்தான் செபிப்பேன். இன்று வரை தினமும் இரவு 10 மணிச் செபத்தை உங்களின் விடுதலைக்காக ஒப்புக்கொடுப்பேன். எனவே நான் வேண்டிக் கொண்டதன் நிமித்தம் உங்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. நிச்சயமாக உங்களுக்கு இறைவன் விடுதலையைக் கொடுப்பார் என்ற நம்பிக்கையுண்டு. கடந்த 25 ஆண்டுகளாக உங்கள் அவலங்களை, துன்பங்களைச் சுமந்த வெரித்தாஸ் இனியும் உங்கள் துன்பங்கள், துயரங்கள் அவலங்களை சுமக்கும் என உறுதியளிக்கிறேன் என்றார்.

பின் யாழ்.ஆயரின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி வெரித்தாஸ் வானொலி ஒருங்கிணைப்பாளர் அருள்திரு ஏ.சிங்கராயன் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பின் மேதகு.பியாற்றோ வான் தாயினால் யாழ்.ஆயருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.



புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய மாணவிகளின் நடன நிகழ்வு

இவற்றைத் தொடர்ந்து திருக்குடும்ப கன்னியர் மடத்தின் ரபான் நடனமும், புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் இசை நடனமும், போரும் சமாதானமும் என்ற கருப்பொருளில் பத்திரிசியார் கல்லூரி மாணவர்களின் நாடகமும் இடம்பெற்றது. பின் நேயர்களின் கேள்விகளுக்கு வெரித்தாஸ் வானொலிக் குழுவினரால் பதிலளிக்கப்பட்டது. ஏற்புரையை அருட்திரு. ஏ.சிங்கராயன் நிகழ்த்தினார்.

இவ் நிகழ்வில் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவ மாணவிகளும், நேயர்களும், குருக்களும், துறவிகளும் பங்குபற்றினர்.

- தே.லிவிங்ஸ்டன்

---

### யாழ்.மாவட்டத்தில் முதன்மைச் சித்தியெய்திய

## ஹாட்லி மாணவனுக்கு கேடயமும் பணப்பரிசும்

(வடமராட்சி கிழக்கு)

தெல்லிப்பளை குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் இரசாயன பேராசான் அமரர்.ஏ.மகாதேவன் ஞாபகார்த்த கேடயமும் பணப்பரிசும் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவன் ஆர்.தணிகைச்செல்வனுக்கு வழங்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் வருடந்தோறும் இராசயனப் பேராசான அமரர்.ஏ.மகாதேவன் ஞாபகார்த்த கேடயத்தையும் பணப்பரிசில்களையும் வழங்கி வருகின்றது.

க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் கணித, விஞ்ஞானப் பிரிவில் முதன்மைச்சித்தி பெற்றுச் சாதனை நிலைநாட்டும் மாணவனுக்கே இக் கேடயத்தையும் பணப்பரிசிலையும் குரும்சிட்டி அபிவிருத்திச் சங்கம் வழங்கி வருகின்றது.

இவ்வருடம் க.பொ.த உயர்தர பரீட்சையில் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஆர்.தணிகைச்செல்வன் யாழ். மாவட்டத்தில் முதன்மைச்சித்தியைப் பெற்றுள்ளார். எனவே அவருக்கு இக்கேடயமும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.

குரும்சிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஏ.என்.நடராசா இக்கேடயத்தையும் பணப்பரிசில்களையும் ஹாட்லிக் கலலூரி அதிபரிடம் கையளித்துள்ளார். கல்லூரியின் பொதுவைபவம் ஒன்றில் வைத்து இப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(17)

---

## தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி செயலமர்வு

(மீசாலை)


தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர், பகுதித்தலைவருக்கான ஆரம்பக்கல்விச் செயற்திட்டச் செயலமர்வு, ஆரம்பகணித செயற்றிட்டம் தொடர்பான அறிவூட்டல் செயலமர்வுகள் இரண்டு கட்டங்களாக வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஒக்ரோபர் 3 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடைபெற்ற முகாமைத்துவ செயலமர்வில் பங்குபற்றாதவர்களுக்கு இன்று முதல் 23 ஆம் திகதி வரையும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற முகாமைத்துவ செயலமர்வில் பங்குபற்றியவர்களிற்கு 25 ஆம், 27 ஆம், 28 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(25)

# போர்க்களங்களில் துணிவுடன் சமராடி ஏற்றம் கண்ட மகளிர் படையணி!





தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வு–கிளிநொச்சியில் நடைபெற்ற போது, அங்கு கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கே தரப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் காலத்தின் தேவை அறிந்து பெண்களும் உள்வாங்கப்பட்டனர். ஆரம்பத்தில் ஆண் போராளிகள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1984இன் பின் ஆணாதிக்க சமூகத்திலிருந்து பெண்கள் தமிழீழப் போராட்டத்திற்கு முனைப்பாக முன்வந்தனர். இந்த வகையில் புதிய காவியம் படைத்த பெண்களில் இருந்து முதலாவது மாவீரராக 2ஆம் லெப்டினன்ட் மாலதி உருவானார். இவர் 1967இல் மன்னார் ஆட்காட்டிவெளி என்னும் இடத்தில் பிறந்தவர். 1985இல் ஸ்ரீலங்கா இராணுவதினர் மீதான தாக்குதல்களில் போராடியவர். 1987இல் யாழ். தொலைத்தொடர்பு நிலையத் தாக்குதலில் ஆண் போராளிகளுடன் இணையாகப் போராடிவர். காயப்பட்டும் தன்னிடமிருந்த பிளேட்டினால் ஷெல் சிதறல்களை வெட்டி அகற்றி உறுதியுடன் போராடியவர் மாலதி. 1987இல் இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு எதிரான தாக்குதலில் பங்கெடுத்து, கோப்பாயில் முன்னேறி மோதலில் ஈடுபட்டபோது விழுப்புண் அடைந்து இருகாலும் சேதமாக சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்தவர். இவருடன் தொடங்கி இன்று 3766 பெண் மாவீரர்கள் இதுவரை இந்த விடுதலைக்கு உரம் சேர்த்துள்ளனர்.

பல நெருக்குதல்களைச் சந்தித்தபோதும் மாலதியின் எழுச்சியுடன் உருவான பெண் படையணி ஆணாதிக்க சமூகத்திற்கு எதிராக வீறுகொண்டு எழுந்தது. ஆரம்பத்தில் மகளிர் படையணியாக இருந்து. 1995இன் இறுதிப்பகுதியில் மாலதி படையணியாக உறுதி கொண்டது. ஓயாத அலைகள் - 1 இல் முல்லை ராணுவ முகாம் அழித்தொழிப்புச் சமர் அதன் முதலாவது களம் ஆகும். மணலாற்றுக்களத்திலும் உறுதுணையாக நின்று மகளிர் படையணி செயலாற்றியது. நகரப்பகுதிகளில் மட்டுமன்றி காடுகளிலும் பெண் போராளிகள் போர்முனையை முன்னெடுத்துச் சென்றனர். சூரியக்கதிர் மூலம் 1995இல் இடம்பெயர்ந்தபோது காட்டிலும் போர்புரிய சோதியா படையணி உருவாகியது. எந்த இடத்திலும், சூழ்நிலையிலும் ஊடறுத்துச் செல்லும் கொமாண்டோ படை, சிறுத்தைப் படையாக உருவாக்கம் பெற்றது. வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் மகளிர் படையணி உருவானது.



இவ்வகையில்- மட்டு - அம்பாறை அன்பரசி படையணி பல வெற்றி சாதனைகளையும் படைத்தது. 1999இல் திருமலையில் திலகா படையணி உருவானது. 1998இல் போராட்டம் நெருக்குதலிற்குள்ளானபோது குட்டிசிறி மோட்டார் படையணியின் மகளிர் பிரிவு உருவானது. 2001இல் தேசிய மகளிர் படையணி உருவானது. இன்று தமிழீழத்தின் விடுதலைப் போரில் பல வெற்றி சாதனைகளை பெண்கள் படையணிகள் படைத்துள்ளன. உலக அரங்கில் விடுதலைக்காகப் போராடுகின்ற நிலையில், பெணகள்படைஅணி தனித்துவமாக தம்மைத் தாம் நிர்வகித்து போர் அரங்கில் களமாடுவது - எமது தமிழீழ வரலாற்றில்தான். ஓயாத அலைகள் 1-2, கிளிநொச்சி, ஆனையிறவு சமர்களில் மகளிர் படையணிகளின் போராளிகள் பெரும் வெற்றிச் சாதனைகளைப் படைத்துள்ளனர். 15 வருட கால வரலாற்றில் இந்த செய்திகள் தொடர்ந்தே வருகின்றன. ஓயாத அலை - 2இல் கிளிநொச்சிநகர் மீட்கப்பட்டது. ஊடறுத்து பரந்தனில் சமர்புரிந்து இராணுவத்தை கிளிநொச்சியை விட்டு நகரவிடாது சமர் நடந்தது. லெப்டினன்ட் கேணல் செல்வி தலைமையில் நடந்த சமரில் இராணுவம் உடைத்துச் சென்றது. என்னுடன் சேர்த்து ஷெல் மழை பொழியுங்கள் என்றார். இன்று அவரில்லை.

2000ஆம் ஆண்டிற்கு முன் பிரிட்டிஷ் கடற்படையில் தனித்துவமான பாரிய கப்பலை வழி நடத்த பெண்களைத் தெரிவுசெய்யலாமா என அங்குள்ள படை உயர் மட்டத்தில் பல முரண்பாடுகள் இருந்து வந்ததைப் பத்திரிகை செய்தி வாயிலாக அறிய முடிந்தது. ஆனால் 1992.03.01இல் காலத்தின் தேவை கருதி விடுதலைப்புலிகளின் கடற்படை- லெப்டிணன்ட் கேணல் இளநிலா தலைமையில் காங்கேசன் துறையில் ஸ்ரீலங்கா கடற்படையுடன் போர் புரிந்தது. தண்ணீருக்கு கீழால் நீண்ட தூரம் சென்று A516 விநியோகக் கப்பல் மீது அங்கயற்கண்ணி வெடிகுண்டு கட்டிப் போராடினாள்.

பெண்கள் தமது விடுதலையினை விரைவாகப் பெற வேண்டும். எமது தேசிய தலைவரின் காலத்தில் பெற வேண்டும். இன்று 5, 6 வருடங்களல்ல பல வருட காலமாக மகளிர் படையணி ஆண் போராளிகளுக்கு நிகராகப் போரிடுகின்றது. இன்று அவர்கள் பல துறைகளிலும் யுத்தகளத்தில் ஆண்களுடன் சரிசமன் என நின்று புரிந்துணர்வுடன் போரிடுவது பாராட்டத்தக்கதாகும். போரிடுவது மட்டுமல்ல பெண்சமத்துவத்திற்கான,, ஒடுக்கப்பட்டவர்களிற்கான வேலைத் திட்டங்களையும் அவர்கள் கொண்டுள்ளனர்.

இன்றைய சூழ்நிலையில் சகல மகளிர் படையணிகளினதும் இராணுவ அணிவகுப்பு, மன்னகுல ஆக்கிரமிப்புச்சமர் வரலாறு, ஊர்திகள் பவனி என்பன தேவையா எனலாம். வடக்கு- கிழக்கு தாயகத்தில் எமது இன நலன் பேணாத, மக்களில் அக்கறை கொண்டிராத ஒரு இராணுவம் இருக்கும் வரை எமது படை அணிகள் இருப்பது தவிர்க்க முடியாததொன்று. தென் தமிழீழத்தில் நிகழும் செய்திகள் தெரிந்ததே. ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படையால் ஆயிரக்கணக்கில் பெண்கள் விதவைகளாகியுள்ளனர்.நேற்றுத் தென் தமிழீழம்- நாளை வட தமிழீழத்தில் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?. எனவே எதற்கும் நாம் தயாராயிருப்போம்.


-தர்மினி



## சிநேகிதியே..

## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






சிந்தி,

வணக்கம். உன் மடல் கண்டேன். 'வரன் கொடுக்கும் தட்சணை வரனுக்குக் கொடுக்கும் தட்சணையானது' என்ற நமது ஈழநாட்டில் சிநேகிதியே பகுதியில் பிரசுரமான கட்டுரை பற்றிக் குறிப்பிட்டிருந்தாய்.

அந்தக்காலத்து நாட்டார் பாடலொன்று-
'பெண் பிறந்தார் வாசலிலே
பெட்டி வரும் பேழை வரும்'
என்று மணமகன் மணப்பெண் வீட்டிற்குக் கொண்டுவரும் சீர்வரிசைகள் பற்றி நீளமாகக் கூறிச்செல்லும்.

அத்தனை சீர்வரிசைகளுடன் வந்து,மணப்பெண்ணுக்குக் கூறை முதல் தேவையான அனைத்தும் கொடுத்து மணப்பந்தல்,அங்கு நடைபெறும் திருமணச்சடங்கு ஆகியவற்றுக்கான செலவுகளையும் தானே பொறுப்பேற்று,திருமணம் முடித்து மனைவியை அழைத்துச்செல்வானாம் அந்தக்காலத்து ஆண்மகன்.

இன்றோஅவன் கருவிலிருந்த காலம் முதல் ஆன செலவுகளுக்கும் தாலி,கூறை,திருமணச்செலவுகளுக்கும் இனாமாகப் பணமும் எதிர்கால வாழ்விற்கு சீதனமும் கொடுத்து விலை பேச வேண்டியதாக இருக்கிறது.

அதைவிடு, கதைத்துக்கதைத்து அலுத்துப் போனவிடயம். ஆனால் புரையோடிவிட்ட புண் அதுவும் பணத்தாசை என்னும் சலரோகத்தினால் படுக்கையாகிவிட்ட எமது சமூகத்திலே என்றோ ஏற்பட்ட புண் அது.

பலர் சேர்ந்து, பலமற்ற சிலரை ஓரங்கட்டநினைத்தால் இருப்பதை இல்லையென்றும் இல்லாததை இருப்பதாகவும் கூறி நினைத்ததைச் சாதித்துவிடுவார்கள். இப்படிப் பெண்களைப் பின்தள்ள எத்தனையோ நடந்தேறிவிட்டன. அதில் இந்த வரதட்சணை போன்ற பலவற்றைக் கூறலாம்.

நமது சித்திரலேகா மௌனகுரு சென்ற திங்களன்று யாழ். பல்கலைக்கழகத்தில் சீமாட்டி லீலாவதி இராமநாதனின் நினைவுப்பேருரையை நடத்தினார். அந்த உரையைக் கேட்கவும் சபையின் பிரதிபலிப்பை பார்க்கவும் அருகில் நீயில்லையே என ஆதங்கப்பட்டேன்.

அவர் கூறிய ஒருவிடயம் என்ன தெரியுமா? நாங்கள் ஔவையாரை ஒரு பாட்டியாகத்தானே கருதிவருகிறோம். அவருக்கு மூதாட்டி உருவமும் காரைக்காலம்மையாருக்கு பேயுருவமும் கொடுக்கப்பட்டதற்குக் காரணமும்,சாதாரண பெண்கள் அத்தகு புலமையுடன்இருந்தார்கள் என்பதை ஏற்க விரும்பாதவர்கள் ஏற்படுத்திய உருவங்களாகத்தானிருக்க வேணடுமென அவர்கூறியது என்னை நிறையச் சிந்திக்கத் தூண்டியது.

உண்மைதான் இந்த அறிவும் புலமையும் மிக்க ஔவை சிறுமியாக இருந்தபோது எவ்வளவு சுட்டியாக இருந்திருப்பாள். இளமைப்பருவத்தில் அவரது அறிவு சுடர்விடாதிருந்து முதுமையிலே தான் பிரகாசித்திருக்குமா? அது மட்டுமல்ல, ஔவை எழுதிய அகநானூற்றுப் பாடல்கள் ஏன் எடுத்துப் பேசப்படுவதில்லை? காதல் பற்றிப் பேசிய அந்த இளம் ஔவை மறைக்கப்பட்டு விட்டாளா? என்பதும் என்னை நிறையவே பாதித்தது. சமுகத்திற்குள்தான் நாம் எத்தனையை மீட்கவேண்டியுள்ளது. மீண்டும் அடுத்த வாரம் உனக்கு மடல் எழுதும் வரை..

அன்புடன்
யோசி

## டேட் அன்ட் நட் ரொபி

**தேவையான பொருட்களும் அளவுகளும்**

| | |
|---|---|
| இனிப்பூட்டப்பட்ட கட்டிப்பால் | - 1ரின் |
| சீனி | - 800 கிராம் |
| தண்ணீர் | - 1 போத்தல் |
| பட்டர் | - 100 கிராம் |
| பேரிச்சம்பழம் | - 400 கிராம் |
| கஜு | - 400 கிராம் |

செய்முறை:-

சீனியையும் தண்ணீரையும் கனமான அடியுள்ள ஒரு பாத்திரத்தில் இட்டுக் கொதிக்க விட்டு, கரைத்து பட்டர், இனிப்பூட்டப்பட்ட கட்டிப் பால் இரண்டையும் சேர்த்து மிதமான தணலில் வைத்து கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். இதில் சிறிதளவு எடுத்து ஒரு டம்ளர் நீரில் இட்டு அது கட்டியாகும் வரை கிளறி அதை அடுப்பில் இருந்து அகற்றி, பேரிச்சம்பழத்தையும்,கஜு ஆகிய இரண்டையும் நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக வெட்டி சிறிது சிறிதாக சேர்த்துக் கிளற வேண்டும். பின்பு பட்டர் தடவிய தட்டையான ஒரு தட்டில் வார்த்து அது ஓரளவு கட்டியானவுடன் சதுரங்களாக வெட்டிக்கொண்டபின் பரிமாறலாம்.






## சிநேகிதியே....

சிநேகிதியே............
ஆண்மை கொண்ட ஆண்
அடக்கியாளும் பெண்மையா நீ?
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
என்ற நியமத்துள் வளர்ந்து
பிள்ளைகளை மட்டும் பிரசவிப்பதுதான்
உனக்கு வேலையா.............

அடுக்களை துடைத்து உடையலம்பி
சோறாக்கிப் பிள்ளைகளை ஆளாக்கி
அடுத்தவளோடு அவன் சென்றாலும் தடுக்காது
புல்லானாலும் புருஷன் கல்லானாலும் கணவன் என்று
கவலைகளை உன்னுள் புதைத்து
தலையணைக்கு மட்டும் தெரிய அழுது
மற்றவர்க்கு முன் முகமலர்ந்து
மூடத்தனத்தில் முடங்கிக்கிடப்பதில்
சுகம் காண்கிறாயா......?




மென்மை போனால் பெண்மை போகும்
என்ற பேச்சால் -உன்னுள்
உண்மையாய் எழுந்த உணர்வுகளை
அடக்கி - உன்
வளர்ச்சி விதைகள் முளைக்காத படியேன்
கருக்கிறாய்..................?
வளர்ச்சிக்குத் தடையென்றால் .....பொறுக்காதே
புயலாகு................
பொறுக்கும் பூமி கூட சிலநேரம்
பூகம்பத்தைப் பிறப்பிக்கிற(து) அம்மா.........!

**கி.கலைவாணி**
**நவாலி தெற்கு**

## மாவினால் கோலம் போடுவது எப்படி

கோலப் பொடியினால் போடும் கோலமானது இலகுவில் அழிந்து விடும். கோலம் ஒன்றிரண்டு நாள் அழியாதிருக்கும் பொருட்டும், கவர்ச்சியாக பார்ப்பதற்கு இருக்கும் பொருட்டும், மாக்கோலம் போடுகிறார்கள். பச்சை அரிசியை தண்ணீரில் ஊற வைத்து அரைத்து மாவாக்கி கோலம் போடுவதற்கு ஏற்றதாற்போல் கரைத்துக் கொள்ளவேண்டும். ஒரு சிறிய துணியை எடுத்துக்கொண்டு மாவில் நனைத்துக் கொள்ளவேண்டும். பின்னர் அந்த நனைந்த துணியை நடுவிரலுக்கும் மோதிர விரலுக்கும் நடுவில் வைத்துக் கொண்டு கட்டை விரலால் அழுத்த வேண்டும். அப்போது ஆள்காட்டி விரலும், சுண்டு விரலும் கொஞ்சம் தூக்கி இருக்க வேண்டும். பிறகு அந்த மாவை அந்த விரல்களின் வளியாக கம்பி மாதிரி இழையாக இழுக்க வேண்டும். இதுவே மாவினால் கோலம் போடும் முறையாகும். இதுவே புள்ளி வைத்தும் போடலாம். இதை வீட்டின் ஓரங்களில் இரண்டு அல்லது நான்கு இழைகளாகப் போடுவது வீட்டிற்கு மிக அழகா இருக்கும்.






## மகிழ்ச்சியுடன் வாழ...



- மனத்தை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கு ஒரு வழி. நல்லதையே நினையுங்கள்.
- எதற்கும் கோபப்படாதீர்கள். பொறுமை மகிழ்ச்சியின் அத்திவாரம்.
- நாளை என்பது அற்புதம். நேற்று என்பது வரலாறு. இன்று என்பது வெகுமதி. எனவே இதை உணர்ந்து செயற்பட்டால் போதும். நிம்மதிக்கு இதுவே உங்கள் தெரிவாகட்டும்...

# கர்ப்பகாலத்தில் எதிர் நோக்கக்கூடிய பிரச்சனைகள்



**கர்ப்ப காலத்தில் எந்த ஒரு நோய்க்கும் வைத்தியரிடம் செல்லும் போது நீங்கள் கர்ப்பமாக இருப்பதைக் கூற மறக்கவேண்டாம்.**

ஒரு பெண்ணிற்கு தாய்மை என்பது மகத்தானது,மகிழ்ச்சியானது. கர்ப்பம் என்பது ஒரு நோயல்ல, இது சாதாரண நிகழ்வு.

பொதுவாக ஒழுங்காக மாத விடாய்வரும் ஒரு பெண்ணிற்கு மாதவிடாய் வராமல் நின்று விட்டால் கர்ப்பம் என்று நினைக்கிறோம். ஆனால் சில நோய்களாலும் மாதவிடாய் வருவது தடைப்படலாம். ஆகவே மாதவிடாய் நின்று விட்டால் ஒருவைத்தியரிடம் சென்று கர்ப்பம்தானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



கர்ப்ப காலத்தில்உடல் ஆரோக்கியம் சரியாகப் பேணப்பட வேண்டும். அல்லாவிடில் உங்கள் சுகமும் உங்கள் கர்ப்பப்பையில் உள்ள சிசுவும் பாதிக்கப்படும். ஏற்கனவே நோயுள்ளவர்களில் நோயின் தாக்கம் கர்ப்ப காலத்தில் அதிகரித்துக் காணலாம்.



உயர்குருதி அமுக்கம், சலரோகம், இருதயக் குறைபாடு, ஓமோன் குறைபாடு போன்ற நோய்கள் தோன்றலாம். உயர் குருதி அமுக்கம், இரத்தப்பெருக்கு, சலரோகம், இரத்தச்சோகை போன்றவற்றுக்கு கர்ப்ப காலத்தில் கீழ் வரும் அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக வைத்தியரை நாடுங்கள்.

### உடல் வீக்கம்

கர்ப்பிணித்தாய்மாருக்கு சிறிதளவு கால் வீக்கம் ஏற்படுவது இயல்பானது. எனினும் முகம், கை மற்றும் ஏனைய உடற்பாகங்கள் வீங்கி இருந்தால் பிரசவத்தால் தூண்டப்பட்ட நச்சுநீர் வியாதியாக இருக்கலாம்.

இந்நோயுடையோருக்கு உயர்ந்த குருதி அமுக்கம் (140/90க்கு அதிகம்) இருப்பதோடு சிறுநீரில் புரதமும் காணப்படலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தும் நீங்கள் தகுந்த வைத்திய ஆலோசனையை பெறத் தவறினால் அது உங்களுக்கும்,கர்ப்பப் பையிலுள்ள சிசுவிற்கும் உயிராபத்தை ஏற்படுத்தும். உங்களை வலிப்பு நிலை (**Eclampsia**) என்ற நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

### இரத்தப்பெருக்கு

கர்ப்பகாலத்தில் சிறிதளவேனும் இரத்தக்கசிவு ஏற்பட்டால் அதனைப் புறக்கணிக்காது உடனே வைத்தியரிடம் சென்று ஆலோசனையைப் பெறவேண்டும்.

கர்ப்பகாலத்தில் ஏற்படும் இரத்தப் பெருக்கு கருச்சிதைவு, சூல் வித்தகம் கீழே இருப்பது (**Placenta previa**), கருப்பப் பைக்கட்டி(**Uteaterine fibrod**) போன்ற பாரிய பிரச்சினைகளாகக் கூட இருக்கலாம். ஆகவே வைத்திய ஆலோசனை பெறுவது கட்டாயமானது.

மேலும் கர்ப்பிணித்தாய்மார்களின் இறப்புக்கு முக்கிய காரணம் பிரசவத்திற்குப் பின்னால் ஏற்படும் இரத்தப்பெருக்கே ஆகும். ஆனால் வைத்தியசாலையில் இரத்தப் பெருக்கு ஏற்படும்போது உரிய சிகிச்சை வழங்கப்படுவதால் தாயின் இறப்பு தவிர்க்கப்படும்.

பொதுவாக வீட்டுப் பிரசவங்களின்போதே இத்தகைய இறப்புகள் தோன்றுவதற்கான சந்தர்ப்பம் அதிகம். அதிகளவு இரத்தப் பெருக்கு ஏற்பட்டால் பின்வரும் அறிகுறி கள் தென்படும்.

- ★ கண்,நாக்கு வெளிறிக்காணப்படுதல்
- ★ அதிகளவு வியர்த்தல்
- ★ கை,கால் குளிர்ந்து இருத்தல்
- ★ சுவாச வீதம் அதிகரித்தல்
- ★ நாடித்துடிப்பு அதிகரித்தல்
- ★ மயக்கம்

பிரசவத்தின் பின் இரத்தப் பெருக்கு ஏற்பட்டால் உடனடியாக வைத்திய சாலையை நாட வேண்டும். சில வேளைகளில் கர்ப்பப்பையினுள்ளும் இரத்தக் கசிவு ஏற்படலாம். இது வெளியில் தெரியாது. இச்சந்தர்ப்பத்தில் மேற்கூறிய அறிகுறிகள் தென்பட்டால் உடனே வைத்திய சாலைக்கு செல்லுங்கள்.

### உடல்நிறை

பொதுவாக கர்ப்பகாலத்தில் உடல் நிறை 10-12 கிலோகிராமினால் அதிகரிக்கும். முதல் 24 வாரங்கள் 6 கிலோ அதிகரிப்பும் பின்னர் மாதமொன்றிற்கு 1-2 கிலோ அதிகரிப்பும் ஏற்படும்.

உடல்நிறை அதிகரிப்பு மேற்கூறிய அளவிலும் கூடுதலாகக் காணப்பட்டால் அது சலரோகத்தினால் ஏற்படும். பெரிய குழந்தையினால் அல்லது இரட்டைக் குழந்தைகளினால் அல்லது நீர் கருப் பையில் இருப்பதனாலும் அவ்வாறு இருக்கலாம்.

மேலும் கர்ப்பகாலத்தில் சலரோகம் ஏற்படும் போது மிதமிஞ்சிய பசி,தாகம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், அடிக்கடி வெள்ளை படுதல் போன்ற அறிகுறிகளும் காணப்படலாம். எனவே இச்சந்தர்ப்பத்தில் வைத்திய ஆலோசனையைப் பெற்று அதன்படி நடக்க வேண்டும். உடல் நிறையானது அதன் உரிய அளவினை அடையாவிடின் அது உங்கள் உடல் நிலையையும் உங்கள் கர்ப்பப்பையிலுள்ள சிசுவின் வளர்ச்சியையும் பாதிக்கும்.

உடல்நிறை உரிய அதிகரிப்பை காட்டாததுடன் உடற்சோர்வு,விரைவில் களைப்படைதல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் அது குருதிச் சோகைக்குரிய அறிகுறியாக இருக்கலாம்.

குருதிச்சோகையானது நிவர்த்தி செய்யப்படாவிடின் அதுகுறைமாதப் பிரசவம்,சிசு வளர்ச்சிக்குறைவு போன்ற பாதிப்புக்களையும் தாயிற்கு பிரசவக் கஷ்டம்,நோய்த்தொற்றல் போன்ற விளைவுகளையும் ஏற்படுத்தும்.


### கர்ப்ப காலத்தில் உடலுறவு

கர்ப்பகாலத்தில் உடலுறவு தகாதது அல்ல. கர்ப்பமான பெண் வழமை போல உடலுறவில் ஈடுபடலாம். ஆனாலும் பின்வரும் சந்தர்ப்பங்களில் அவற்றைத் தவிர்ப்பது நல்லது.

- அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுதல்
- உடலுறவில் நோ ஏற்படுதல்
- கர்ப்ப காலத்தில் ஆரம்ப,இறுதி வாரங்கள்

ஒரு பெண் சாதாரண பிரசவத்தின் பின் மீண்டும் 6-8 வாரங்களில் உடலுறவு கொள்ள ஆரம்பிக்கலாம். சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பிரசவித்த பெண்ணும் 6-8 வாரங்களில் உடலுறவு கொள் ளலாம்.

கல்வி சார் பொருட்கள் தயாரிப்பலகு,
சமுதாய மருத்தவத்துறை,
மருத்து பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



**கர்ப்ப காவத்தில் சத்துக் குளிசைகள்[இரும்பு, போலிக்கமிலம்] தவிர்ந்த ஏனைய குளிசைகளை எடுப்பதற்கு முன் வைத்தியரிடம் ஆலோசனையைப் பெறுங்கள்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கல்லடுக்கி மேலே கனமான உருளைகளைச்*
*செல்லவிட்டு செல்லவிட்டு செப்பனிட்ட*
*நல்ல நடு வீதி அங்கே - ஒரு புல்*
*இரு தளிர்க்கை நீட்டி நின்றாள்!*

- மஹாகவி உருத்திரமூர்த்தி.

# நமது நோக்கு

## மானுட விடுதலையை நோக்கி ஒன்றுகூடுவோம்!

கலையையும் கலை மாண்பினையும் போற்றி வளர்த்த தமிழ் மண்ணில் - நாளை மற்றுமோர் தமிழ் விழா அரங்கேறுகின்றது.

தமிழர் தம் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்து நிற்கும் - கலை நயமும், படைப்புத் திறனும் என்றுமே வற்றாத ஜீவ நதியெனத் தொடர்வதை - நாளை ஆரம்பமாகும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002' - உலகின் எட்டுத் திக்கிலும் முரசறையவிருக்கிறது.

காதலையும், பிரிவையும், இயற்கையையும் பாடிய கவிஞர்கள் மத்தியில் - சமர்க்களமாடியபடியே புதிய புறநானூற்றைப் படைத்தவர்கள் மிகுந்த மண்ணில் - சமாதானத்தின் நிழலிலிருந்து, மீட்டலும் இனிச் செல்லும் பாதையும் பற்றி ஆக்கவியலாளர்கள் ஆராயவுள்ளனர்.

தமிழ் இலக்கியப் போக்கில் புதிய பரிமாணத்தைச் சுட்டி நிற்பதாக அமையப்போகும் - தமிழ்க் கூடல் நிகழ்வுகள் - இன, மத, தேச, அரசியல் வேறுபாடின்றி மானுட விடுதலை நோக்கில் ஒன்று கூடும் அற்புதம் மிக்க சந்திப்பாக அமையப் போகின்றன.

கடந்த சில தசாப்தங்களாக வேறு வேறு தளங்களில் வேறு வேறு அரசியல் நோக்கங்களுடன் ஆக்கங்கள் படைத்தோர், தமிழர் தாயகத்தின் பண்பாட்டுத் தலைநகரில் கூடுவது இலக்கியத்தின் மானுட நோக்கிற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியென்றே கொள்ளலாம்.

ஈழத்தமிழர் போராட்டத்திற்காக - தமிழகத்தில் பெரும் நெருக்கடிகள் மத்தியிலும் ஆதரவுக் குரலும் உறுதியான பற்றுறுதியும் வெளிப்படுத்தியவர்களில் போற்றத்தக்கோரும் ஒன்றுகூடலில் சமூகந்தர இருப்பது - தமிழ் அபிமானிகளின் மனங்களில் உவகையைத் தோற்றுவித்துள்ளது.

கடல் பிரித்தாலும் - நாங்கள் உங்கள் சகோதரரே என்று தோள் கொடுத்து துணை தர வந்திருக்கும் உறவுகளை வரவேற்பதில் ஈழத்தமிழ் மண் பெருமை கொள்கின்றது.

உயிரை ஆகுதியாக்கி உதிரம் சிந்திய மண்ணின் உயர்வை - மேடைகளிலும் கவிதைகளிலும் ஓவியங்களிலும் எழுத்துக்களிலும் செதுக்கிய எம் தமிழகச் சகோதரருடன் நன்றி மறவா உணர்வோடு சங்கமிக்கின்றோம்.


யுத்தத்தின் வலிகள் தாங்கி, விடுதலையொன்றே இலட்சியமெனவரிந்து நின்ற தாய் மண்ணின் உணர்வுகளை - வருவோர் எல்லோரும் உணரவும், உள் வாங்கவும் - உட்பதிவை, உலகெங்கும் பரப்பவும் நாளை ஆரம்பமாகும் 'தமிழ்க் கூடல்' வழிதரட்டும்.

இந்தவகையில், 'தமிழ்க் கூடல் 2002' ஈழத்தமிழர் உரிமைப்போரின் அரசியல் இலக்குகளை மட்டுமல்லாது, அதற்குமப்பால் விடுதலைப் போராட்டம் வழிச் செலுத்திய சமூக, மானுட விடுதலையை அதன் பல்வேறு பரிமாணங்களை, செல்வாக்கினை எடுத்துச்சொல்லும் வேளையில் -

இதுவரை காலமும் இருந்துவந்த முரண்களும், எதிர்வாதத் திறனாய்வுகளும் வேற்றுமைகளும் நீக்கப்பட்டு - ஒட்டு மொத்த மானுடத்தின் சமூக, பொருளாதார, அரசியல் தளை நீக்கத்திற்கு அது கட்டியம் கூறுவதாக அமையட்டும்.

தமிழ்க் கூடலுடன் ஆரம்பமாகும் புரிந்துணர்வும் புத்தூக்கமும் ஈழத் தமிழ் இலக்கியத்தை இன்னமும் வளம்படுத்தவும் வளர்க்கவும் ஊக்குவிசையாக அமையுமாயின் - அதுவே இந்த ஒன்றுகூடலின் வெற்றிகளில் குறிப்பிடத்தக்கதாகவும் அமையும்.

# விசுவாசமான படையினர் மூலமாக பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ரணில்!



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு நம்பிக்கையான படையதிகாரிகளையும், படைகளையும் கொண்ட விசேட படையணி ஒன்றை உத்தியோகப்பற்றற்ற ரீதியில் அமைத்திருப்பதாக தெரிய வருகின்றது.

முக்கியமான இடங்களில் மற்றும், நிகழ்வுகள், வைபவங்களின்போதும் தனக்கு விசுவாசமான படையைப் பணியில் அமர்த்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்குடன் பல தரப்புகள் செயற்பட்டு வருவதால் தனது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கிலேயே ரணில் விக்கிரமசிங்க தனக்கு நெருக்கமானவர்களைக் கொண்ட படையை அமைத்துள்ளார்.

இப்படைப்பிரிவே ரணிலின் தனிப்பட்ட பாதுகாப்பு, அவர் செல்லும் இடங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி வருகின்றது. அத்துடன் கட்டுநாயக்க விமான நிலையம் உள்ளிட்ட முக்கியமான இடங்களிலும் இவ்விசேட படையினரே பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முப்படைகளில் இருந்தும், பொலிஸில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட இந்த விசேட தனிப்படையே புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்காவுக்கு வந்திறங்கியபோது முழுமையான பாதுகாப்பை வழங்கியதாகவும் தெரியவருகிறது.

# யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி ஜனவரி முதல் புதிய கட்டடத்தில்!

## இன்னொரு கட்டடத் தொகுதிக்கும் நிதி ஒதுக்கீடு

(வலி-கிழக்கு)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் - ஒரு பகுதியில் இயங்கி வரும் - யாழ். தேசிய கல்வியற் கல்லூரி - ஜனவரி மாதம் முதல் புதிய கட்டடத் தொகுதியில் இயங்கவுள்ளது.

கோப்பாய் இராசவீதியில் இதற்கான கட்டடத் தொகுதி 3 கோடி 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

தமது சொந்தக் கட்டடத்தில் கல்வியற் கல்லூரி - இயங்க ஆரம்பித்ததும் - பாடசாலைகளின் கல்வி மேம்பாடு தொடர்பாக பல்வேறு செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என அதன் பீடாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் இரண்டாவது கட்டடத் தொகுதி அமைப்பதற்கு 40 கோடி ரூபா, நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் இராசவீதியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட கட்டிடத் தொகுதிக்கு அண்மையில் இரண்டாவது கட்டிடத் தொகுதி அமைக்கும் பணியானது- 2003 ஜனவரி மாதமளவில் ஆரம்பிக்கப்படுமென யாழ். தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்துள்ளார். (79)

# போதிய வசதிகளின்றி இயங்கும் அம்பன் அரசினர் வைத்தியசாலை!

(கரவெட்டி)

அம்பன் ஆஸ்பத்திரி போதிய வசதிகளின்றி இயங்குகின்றது.

இவ்வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவு நடைபெறுவதில்லை. இதனால் இவ்வைத்தியசாலையை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் - அவசர சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் வைத்தியர் பற்றாக்குறையும் இங்கு நிலவுவதால் போயா, மற்றும் விடுமுறை நாட்களில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும் இயங்குவதில்லை. (22)

# கீரிமலைத் தீர்த்தக் கேணி புனரமைப்புப் பணிகள் முடிவு

கீரிமலை தீர்த்தக்கேணி மடங்களின் புனரமைப்புக்காக றான் (RRAN) நிதியிலிருந்து வழங்கப்பட்ட ஒன்பது இலட்சம் ரூபா நிதியினைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளது.

தற்போது கீரிமலைக்குச் செல்லப் படையினர் அனுமதித்ததையடுத்து பொதுமக்கள் அங்கு சென்று வருவது குறிப்பிடத்தக்கது. (13)

# சங்கராச்சாரியார், ஆதீனத்தலைவர்கள் மூலம் வாஜபாய், ஜெயலலிதாவுக்கு அழுத்தம் தரலாம்!

## யாழ்.வந்த தமிழக மக்கள் உரிமைக் குழுவினர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெறும் அமைதி முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு தமிழகத்திலுள்ள காஞ்சி சங்கராச்சாரியார் உட்பட ஆதீன முதல்வர்கள் மூலம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் மற்றும் மத்திய அரசுக்கும் அழுத்தம் கொடுப்பதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபட்டுள்ளதாக தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த மக்கள் உரிமைக் குழு பிரதிநிதிக் குழுவினர் தெரிவித்திருந்தனர்.

நமது ஈழநாட்டுக்கு அளித்த பேட்டியின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தனர். மெதடிஸ்த திருச்சபையின் சென்னைப் பேராயர் தேவசகாயம், திருமதி.சரஸ்வதி, பேராசிரியர் தேவசகாயம் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

இங்குள்ள மதத்தலைவர்கள்களைக் கொண்டு தமிழக ஆதீன முதல்வர்களதும், காஞ்சி சங்கராச்சாரியாரினதும் கவனத்தை ஈழத்தமிழ் மக்கள் மீது திருப்புவது முதல் நடவடிக்கையாகும். இதையடுத்து தமிழக மதத் தலைவர்கள் மூலம் ஈழத்தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஆகியோருக்கு அழுத்தம் கொடுப்பதற்கான முயற்சிகளைத் தாம் மேற்கொள்ளவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் - தற்போது இந்தியாவிலுள்ள 'பொடா' தடைச் சட்டம் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்போரின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தியுள்ளது. ஆனால் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவான தமிழக மக்களின் கருத்துக்கள் மங்கிவிடவில்லை.

அரசியல் சூழ்நிலைகள் மாற்றமடையும் போது தமிழக மக்களின் ஆதரவு அலையை வெளிப்படையாகத் தெரிந்து கொள்ள முடியும் என அவர்கள் அப்போது மேலும் தெரிவித்தனர்.

# யாழ்.நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களை மீளகுடியமர்த்த நடவடிக்கை!

## யாழ். செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு யாழ்.செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இன்னமும் ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். சில நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் எதுவும் பூரணமாக கிடைக்காமல் பல வருடங்களாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதய சூழ்நிலையில் மேற்படி நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்த மக்களைத் தொடர்ந்தும் குறைந்த வசதிகளுடன் தங்க வைப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக இடம்பெயர்ந்த குடும்பங்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகின்றது. இவற்றைவிட இடம்பெயர்ந்த மக்களுக்கென புதிய நலன்புரிநிலையங்களை அமைப்பதை தவிர்த்துக் கொள்ளும்படியும் யாழ்.செயலகம் குடாநாட்டிலுள்ள பிரதேச செயலக அதிகாரிகளை கேட்டுள்ளது. அத்துடன் மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமருவதை ஊக்குவிக்கும் வகையில் செயற்திட்டங்களைத் தயாரிக்கும்படியும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (க)

# வருமான அபிவிருத்தித் திட்டம் வன்னியில் ஆரம்பித்து வைப்பு

போரினால் பாதிப்புற்று வறுமைநிலையிலுள்ள குடும்பங்களின் வருமான அதிகரிப்பு திட்டத்தின் ஆரம்ப வைபவம் கடந்த 13ஆம் திகதி காலை 10.30 மணிக்குத் தருமபுரம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

சமுதாய முன்னேற்ற நிலையத்தின் வன்னி இணைப்பாளர் கமலநாதன் தலைமையில் கெயர் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இவ்விழாவில் - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கரைச்சிப் பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட வைத்திய போதனாசிரியர், சமூக முன்னேற்ற நிறுவன இயக்குநர், தமிழர் புனர்வாழ்வுக் கழக இயக்குனர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்தின் மூலம் 70 பயனாளிகள் பயன் பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# அவுஸ்திரேலிய வானலைகளில் பரவும் தேமதுரத் தமிழ் ஒலிபரப்பு!

## விருந்தினர் பக்கம்

***கேள்வி:-*** அவுஸ்திரேலியாவில் நீங்கள் செய்து வரும் தமிழ் ஒலி பரப்பு சேவை பற்றி கூறமுடியுமா?

***பதில்:-*** கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து அவுஸ்திரேலியாவில் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முழு நேரமாக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்து வருகின்றது.

அவுஸ்திரேலியாவில் ஏற்கனவே தமிழ் ஒலிபரப்பு சேவைகள் இருந்த போதும் எல்லாத் தமிழ் மக்களும் கலந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு நாம் இந்தத் தமிழ்ச் சேவையை ஆரம்பித்தோம்.

அவுஸ்திரேலியா அரசாங்கத் தால்கூட சமூக வானொலி என்று அதாவது சமூகத்தில் மக்கள் பங்கு பற்றும் வானொலி ஒன்று தேவை என கருதப்படுகிறது. அதேபோல் தான் நாமும் எமது தமிழ் மக்கள் அனைவரும் பங்குபற்றக்கூடிய வகையில் இலாப நோக்கம் இன்றி சேவை நோக்கோடு ஒலிபரப்பை நடத்தி வருகிறோம்.

வானொலியை ஆரம்பிக்கும் போது பலர் எம்முடன் சேர்ந்து ஊதியம் எதுவும் வாங்காமல் சேவையாற்ற முன்வந்தார்கள். இவர்கள் எல்லோரையும் இணைத்து ஒலிபரப்புச் சேவையை நடத்துவதற்காக ஒரு கட்டமைப்பினை உருவாக்கினோம். இது மட்டுமல்லாது அங்கிருக்கும் சமய,சமூக முக்கிய உறுப்பினர்களை வைத்து ஆலோசனைக் குழுவை உருவாக்கினோம்.

எமது வானொலி சேவையில் 60க்கு மேற்பட்டவர்கள் பணியாற்றுகிறார்கள். ஊதியம் எதனையும் எதிர்பார்க்காது இந்தத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் என்ற வகையில் அவர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

***கேள்வி:-*** உங்கள் வானொலி நிகழ்ச்சிகள் பற்றி?

***பதில்:-***எமது வானொலியில் நாம் பல விதமான நிகழ்ச்சிகளை தொகுத்தளித்து வருகின்றோம். நாம் முக்கியமாக கருத்தில் கொள்வது சிறுவர்கள், புதிதாக அவுஸ்திரேலியா வுக்கு வந்தவர்கள்,மற்றும் ஒய்வு பெற்றவர்கள் அதாவது மூத்த குடிமக்கள் என்பவர்களையே. அத்துடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் சம்பந்த மான செய்திகள், தமிழ் மக்களின் பிரச்சனைகள் பற்றிய விடயங்களையும் சேர்த்துக் கொள்கின்றோம்.

எமது வானொலியில் தென்னாபிரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களும் பங்கு கொள்கிறார்கள். அதே போன்று வேறு நாடுகளில் வாழும் மக்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டு வருகின்றோம்.

தற்போது எமது ஒலிபரப்பு சேவையினை நகரப்புறங்களிலும் நகரப்புறங்களைச் சூழவுள்ள பிரதேசங்களில் கேட்கக்கூடியதாக இருக்கின்றது. இன்னமும் ஓரிரு மாதங்களில் மற்றைய நகரங்களுக்கும் ஒலிபரப்பை விஸ்தரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். அதாவது மெல்போர்ன், கன்பரா மற்றும் அண்டைய நாடான நியூசிலாந்திற்கும் சேவையினை விஸ்தரிக்கவுள்ளோம்.

***கேள்வி:-*** உங்கள் வானொலி ஒலிபரப்பின் நவீனத்துவம் பற்றிக் கூறுவீர்களா?

***பதில் :-*** எமது வானொலி நிலையத்தை நான் நிர்மாணித்த போது நிறையப் பணத்தை செலவழித்து தன்னியக்க முறையில் ஒலிபரப்புச் செய்யக்கூடிய கருவிகளை வாங்கினோம். ஏனெனில் வெளிநாடுகளில் சிக்கலான விடயம் என்னவென்றால்- மனித வளத்தைக் கொண்டு இயக்குவது தான். அதனால் தான் எமது கலையகத்தில் தன்னியக்கக் கருவிகளைக் கொண்டு ஒலிபரப்புச் சேவையை நடத்துவதால் எமது குறிக்கப்பட்ட மனிதவளத்தைக் கொண்டு தொடர்ந்து இயக்கக்கூடியதாகவுள்ளது.

எமது நிகழ்ச்சிகள் அனைத்தும் கணினியில் பதிவு செய்து ஒலிபரப்பு செய்யப்பட்டு வருகின்றது.

எமது வானொலி சமூக வானொலி என்ற காரணத்தினால அவுஸ்திரேலியாவில் உள்ள மற்றைய வானொலிகளான ஏ.பி.சி, எஸ்.பி. எஸ் என்ற விசேட ஒலிபரப்பு சேவைகளுடனும் மற்றும், பி.பி.சி ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துடனும் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளோம். அதாவது நாங்கள் அவர்களின் நிகழ்ச்சிகளைப் பெற்று ஒலிபரப்புச் செய்வதற்கும் அவர்கள் எமது நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்வதற்குமாக ஒப்பந்தம் செய்துள்ளோம். மற்றும் கனடாவில் உள்ள சி.பி.ஆர் என்ற வானொலியுடனும் ஒப்பந்தம் செய்து ஒலிபரப்புச் சேவையை மேற்கொண்டு வருகின்றோம்.

எமது நோக்கம் தமிழ்மொழியை மக்கள் பேசவேண்டும் என்பதுதான். முக்கியமான விடயம் என்னவென்றால் இங்கு வாழும் ஒரு சில இளைஞர்களுக்கும் வயது போனவர்களுக்கும் தமிழ் மொழியில் பேசுவதற்குக் கடினமாக இருக்கிறது. அவர்களையும் சேர்த்துக்கொண்டு தமிழ் அறிவை ஊட்டவேண்டும் என்பதற்காகவும் நாங்கள் வாரத்தில் எட்டு மணித்தியாலங்கள் ஆங்கிலத்திலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றோம். நாம் தமிழர்கள் என்ற அடையாளத்தை கட்டிக் காப்பதற்காக இதைச் செய்துவருகின்றோம்.

இங்கு பிறந்து வளர்ந்த சிறுவர்கள் சிலர் தமிழ் தெரியாமல் இருப்பார்கள். ஆனால் தமிழில் நிகழ்ச்சிகளை, பாட்டுக்களை தமிழ்க் கலாச்சாரத்தை அறிய விரும்புபவர்களாக காணப்படுகின்றார்கள். அவர்களுக்கும் நாம் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் பெருமளவில் எமது நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வருகின்றார்கள். அவர்கள் தொடர்ந்தும் பங்கேற்பார்கள் என்று நம்புகின்றோம். அவர்கள் இளைய தலைமுறைகளை தொடர்ந்து வழி நடத்தி வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

***கேள்வி:-*** அவுஸ்திரேலிய ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் அலை வரிசை என்ன?

***பதில்:-*** எமது வானொலி ஒரு விசேட அலைவரிசையில் நடை பெறுகிறது. நாம் அவுஸ்திரேலியா மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் 'தமிழ் முழக்கம்' என்றொரு இன்னொரு வானொலி சேவை மூலம் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒலிபரப்பு செய்கின்றோம். எமது வானொலியின் சகோதர சேவையாகத்தான் அதுவும் நடைபெறுகிறது. அந்த வானொலிச் சேவை கடந்த 10 வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

இது மட்டுமல்ல- அவுஸ்திரேலியா சமூகத்தவர்கள் எமது செய்திகளை அறிய வேண்டுமென்றால் நாம் அவர்களுடன் அரசியல் ரீதியாகத்தான் அணுக முடியும். அதற்காக நாம் 'ஈழத்தமிழர் கழகம்' ஒன்றை நிறுவி, அதன் மூலமாகவும் செயல்படுத்தி வருகின்றோம். இது சுமார் 26 வருடமாக செயல்பட்டு வருகின்றது. இந்தக் கழகம் மூலம் தான் நாம் ஊடகங்கள், அரசியல் தலைவர்களை சந்தித்து 'பொங்குதமிழ்' போன்ற நிகழ்ச்சிகளை செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்வோம். இதுதவிர தமிழர்களின் பிரச்சனைகளை, அவர்கள் படும்துன்பங்களைத் தெரியப் படுத்துவோம்.

*கேள்வி:-* தாயகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து ஒலி பரப்பு செய்வதுண்டா?

*பதில்:-* இதில் எமக்கு சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றது. இப்பொழுது தான் அந்த முயற்சிகளை மேற்கொள்கின்றோம். குறிப்பாக வன்னிப் பகுதியில் ஒரு சில நிகழ்ச்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் செய்கின்றோம். கொழும்பிலும் சில வானொலிகளுடன் சந்தர்ப்பம் கிடைத்தால் பேச இருக்கிறேன். கொழும்பில் ஒலிபரப்பான ஒரு சில நிகழ்ச்சிகளை குறிப்பாக நாடகங்கள் போன்றவற்றினை மீள் ஒலிபரப்புச் செய்தோம்.

***கேள்வி:-*** நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் ஆர்வம் எவ்வாறு உள்ளது?

---

**சிவா பிரபாகரன்-தகவல் தொடர்பியல் முதுநிலைப் பட்டதாரியான இவர், கடந்த பல வருடங்களாகவே அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார். அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநரான இவரது மொழிப்பற்றும், இனப்பற்றும் அவுஸ்திரேலியாக் கண்டத்திலும் தேமதுரத் தமிழை எங்கும் பரவச் செய்திருக்கிறது. அண்மையில் யாழ்.வந்த அவருடனான சந்திப்பு இது.**

---

***பதில்:-*** எமது ஒலிபரப்பு குறிக்கப்பட்ட அலை வரிசையில் கேட்கக் கூடியதாக இருப்பதால் அவர்கள் அதற்காக விசேட வானொலிப் பெட்டியைக் கொள்வனவு செய்ய வேண்டும். ஏனெனில் வழமையான அலை வரிசையில் எமது ஒலிபரப்பு நிகழ்வதில்லை. நாம் ஒரு வானொலிப் பெட்டியை 99 டொலர்களுக்கு விற்கின்றோம். மக்கள் வானொலிப் பெட்டியை வாங்குவதனை வைத்து அவர்களின் ஆர்வத்தை நாம் அறிந்து கொள்ள முடியும்.

சிட்னியில் 7 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் இருக்கின்றன. அங்கு 1500 வானொலிப் பெட்டிகளை விற்பனை செய்துள்ளோம். தற்போது எம்மிடம் வானொலிப் பெட்டிகள் கையிருப்பில் இல்லை. வெளிநாட்டில் இருந்து வானொலிப் பெட்டிகள் வரவேண்டும். அவற்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

நாம் ஆறு கிழமைகளுக்கு ஒரு தடவை வானொலி மூலம் மக்களுடன் தொடர்பு கொள்வதுண்டு அவர்கள் தொலைபேசி மூலம் எம்முடன் தொடர்பு கொண்டு தமது கருத்துக்களைச் சொல்வார்கள். அதில் பெருமளவான மக்கள் பங்கு கொள்கின்றார்கள்.

அது தவிர நாம் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை எமது நிறுவனத்தில் வேலை செய்பவர்களுடன் ஏனைய ஆர்வலர்களையும் இணைத்து ஒன்றுகூடல் செய்வதும் உண்டு. அதிலும் அதிகளவிலான மக்கள் கலந்து கொள்வதனையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

***கேள்வி:-*** அவுஸ்ரேலியாவில் தமிழர்களின் தற்போதைய சமாதான நிலைப்பாடு பற்றிய கருத்து என்னவென்று கூறமுடியுமா?

***பதில் :-*** அவுஸ்ரேலியாவில் மட்டு மல்ல உலகில் உள்ள தமிழர்கள் ஒரு நீதியான சமாதானம் தேவை என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். அது மட்டுமல்ல அப்படியான சமாதானம் தான் நிலைக்கும் எனவும் நம்புகின்றார்கள்.

அதேபோல் வெளிநாட்டில் இருப்பவர்களும் தமிழர்களுக்குச் சமாதானமான வாழ்வு ஏற்படுவதைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கின்றார்கள். ஆனால் இதுவரையில் அது பற்றிய தெளிவான விடயங்கள் பேசப்படவில்லை. அடுத்த கட்டப் பேச்சின் மூலம் நல்ல தீர்வு கிடைத்து- இடைக்கால நிர்வாகம் கிடைக்கும் வரையில் அவர்கள் எதுவும் சொல்ல முடியாமல் இருக்கின்றார்கள். ஆனால் சமாதானம் ஏற்பட்டதனை நினைத்து மிகுந்த சந்தோஷத்தோடுதான் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதனை திடமாகச் சொல்ல முடியும்.

***கேள்வி:-*** எமது நாட்டில் நடக்கப்போகும் புனர்வாழ்வு புனரமைப்பு சம்மந்தமாகஅங்குள்ள தமிழர்களின் பங்கு என்ன?

***பதில்:-*** அவுஸத்திரேலியாவைப் பொறுத்தவரையும் பல அமைப்புக்கள் இந்த புனரமைப்புக்கு பல வழிகளில் உதவுகின்றன. 'ஈழத்தமிழர் கழகம்' இலங்கையில் இருக்கும் ஐந்து ஆறு நிறுவனங்களுடன் இணைந்து சிறுவர் புனர்வாழ்வுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம், மட்டக்களப்பு விவேகானந்தாக் கல்லூரி போன்ற சில அமைப்புக்களுக்கு இயலுமான வரையில் நிதி உதவி வழங்கி வருகின்றோம்.



**சிவா பிரபாகரன்**

குறிப்பாக தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தின் ஆதரவற்ற பெண்கள் பராமரிப்பு இல்லத்திற்கென இரண்டு அச்சியந்திரங்களை அங்கிருந்து அனுப்பி வைத்திருக்கின்றோம். பொருளியல் உதவி மட்டுமல்ல, தொடர்ந்தும் அங்குள்ளவர்கள் தொழில்நுட்பரீதியான உதவிகளை வழங்கவும் காத்திருக்கின்றார்கள்.

***கேள்வி:-*** உங்களின் பணி, வாழ்க்கை முறை பற்றி கூறமுடியுமா?

***பதில்:-*** நான் தொலைத்தொடர்புத் துறையில் பலகாலமாக பொறியியலாளராகவும் அதைத் தொடர்ந்து முகாமைத்துவத்திலும் பலகாலம் சேவை செய்து வந்தேன். தற்போது நான் எனது நிறுவனத்தின் இணையத்தள விவகாரங்களுக்காக தேசிய முகாமையாளராக பணிபுரிந்து வருகிறேன்.

***கேள்வி:-*** யாழ்ப்பாணம் உங்கள் பார்வையில் எப்படி இருக்கிறது? யாழ்ப்பாண மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

***பதில்:-*** யாழ்ப்பாண மக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள். யுத்தத்தை நேரில் எதிர் கொண்டவர்கள்.


கடந்த 10 மாதங்களாக ஏற்பட்டுவரும் சமாதானம் அவர்களுக்கு நல்லதொரு வாழ்வை பெற்றுத் தரும் என்று நம்புகின்றோம். அது ஒரு நிரந்தரத் தீர்வாக அமையுமானால் நாம் மிகவும் சந்தோஷப்படுவோம்.

**சந்திப்பு:- தானா.விஷ்ணு**

---

# "அன்னதானமெனும் அறம் புரிவோம்"

உலகத்திலுள்ள மக்கள் வீடு பேறடைவதற்குச் சாதனமாக இருந்து உபகரிப்பது அறம் ஒன்றே



யாம். நாம் சம்பாதித்த பொருள் இந்த ஜென்மத்தில் மட்டும் உதவி செய்யும். நாம் செய்யும் அறமோ மறுமைக்கும் வந்து உதவி செய்யும்.

எத்தேசத்தில், எக்குலத்தில் , என்ன பிறப்பில் பிறந்தாலும் நாம் இப்பொழுது இங்கு செய்யும் அறம் பின் தொடர்ந்து வரும். அதனால் அன்றோ ஒளவைப்பிராட்டியார் நமக்கு உபதேசிக்க வந்த பொழுது முதலில் "அறஞ் செய விரும்பு" என்று வற்புறுத்தியுள்ளார். அந்த அறமாவது பலதிறப்பட்டுள்ளது. அவற்றில் தானம், தருமம் என்ற இருவகைகள் சிறந்து விளங்குகின்றன. இந்த இருவகையில் முதலாவதாக நின்ற தானத்தில் பூதானம், கோதானம், வஸ்திரதானம், கன்னி காதானம், சுவர்ணதானம் எனப் பல கிளைகளுண்டு. இவற்றுள் தலை சிறந்து விளங்குவது அன்னதானம். உயிரானது கிருதயுகத்தில் எலும்புகளைப் பற்றி இருந்தது. திரேதாயுகத்தில் மாமிசத்தைப் பற்றி இருந்தது. துவாபரயுகத்தில் இரத்தத்தைப் பற்றி இருந்தது. கலியுகத்தில் அன்னத்தைப் பற்றி இருக்கிறது.

ஆதலால் உயிர்கள் அன்னத்தைத் தான் முக்கிய ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றன. பசித்தோருக்கு அன்னத்தைக் கொடுத்தால் உயிரைக் கொடுத்தது போலாகும். குஷ்டம்,க்ஷயம், சூலை முதலிய வகைகளில் எத்துணைக் கொடிய நோய் ஒருவனுக்கு வந்து வருத்தினாலும் சில காலமாவது உயிர் வாழலாம். 'பசி' என்னும் கொடிய நோய் ஒருவனுக்கு வந்துசேர்ந்ததானால் சிறிது காலமாவது உயிர் வாழ முடியுமா? பசிநோய் வந்த நேரத்தில் எவ்வளவு சிரமம் உண்டாகின்றது? கண்பஞ்சடைகிறது, காதடைக்கிறது, தலை சுற்றுகிறது, வயிறு ஒட்டிப்போகிறது, கால்கள் தடுமாறுகின்றன, புத்தி தடுமாறுகிறது, உயிர் துடிக்கிறது, கருவி கரணங்களெல்லாம் தத்தஞ் செயல் களின்று தவிக்கின்றனவல்லவா? அத்தகைய கொடிய பசியை ஆற்றுவதைக் காட்டிலும் சிறந்த தருமம் மூன்று உலகங்களிலும் கிடையாது என்பது உறுதி. பசி என்னும் நோயை அன்னம் என்கிற மருந்தைக் கொடுத்து நீக்கவேண்டும். பசியால் களைத்து வந்தவனுக்கு சிறிது அன்னம் கொடுக்க அதை அருந்தினவுடனே அவன் முகம் எவ்வளவு பொலிவடைகிறது? மனம் எவ்வளவு ஆனந்தமடைகிறது?. ஆன்மா எவ்வளவு சாந்தியடைகிறது? சிந்தியுங்கள் அப்போது அன்னம் கொடுத்தவனுக்கு எவ்வளவு புண்ணியம் உண்டாகிறது? பசியாற்றுவததைக் காட்டிலும் சிறந்த தவம் வேறில்லை.

ஒருவனுக்குப் பசிப்பிணி வந்த போது நான் போய் ஒருவரை ஒன்றும் கேட்கமாட்டேன். "ஏற்பதிகழ்ச்சி" என்று சொல்லிக் கொண்டிருந்த மானமும் நீங்குகிறது. நான் உயர்ந்த குலம், ஆசாரத்திற் சிறந்தவன், அவன் தாழ்ந்தவன் என்று பாராட்டுகிற குலமும் நீங்குகிறது, கல்வி கேள்விகளிற் சிறந்து நுண்ணிய மதியுடன் திகழ்கின்றோரது கல்வியறிவும் மங்குகிறது. காண்பவர்களது கண்களைக் கவரும் கட்டழகும் குன்றுகிறது. பொருளுடையோன் என்கின்ற பெருமிதமும் பெயர்கிறது. தானம் புரிகின்ற தன்மையும் தவிர்கிறது, உயர்ச்சியும் ஒழிகிறது, தேன் போன்ற இனிய சொற்களையுடைய மாதர் மேல் மனத்தை வைத்து கங்குல் பகலாய்க் கண் துஞ்சாது கலங்குகின்ற காமவேட்கையும் கடிதில் விலகுகிறது.

"மானங் குலங்கல்வி வன்மை அறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை-தேனின்
பசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திட பறந்துபோம்"

என ஒளவைமூதாட்டி சொல்லுகிறாள். எனவே தானங்களில் சிறந்த அன்னதானமென்ற அறம் செய்து வாழ்வோம்.

**கவிமாமணி**

**காரை.எம்.பி.அருளானந்தம்**

# சின்னஞ் சிறு செய்திகள்

## தென்மராட்சி வலய கலந்துரையாடல்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப.2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதெனவும் தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளினதும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறும் எனவும் வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.(25)

## இராமநாதன் நினைவுப் பேருரை இன்று!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3மணியளவில் சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை இடம் பெறும். "நடைமுறையும் நோக்கும்" எனும் தலைப்பில் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

இதையடுத்து யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## நாவற்குழியில் திருடர் தொல்லை

(கொக்குவில் மேற்கு)

கேரதீவு வீதி- நாவற்குழியில் மக்கள் மீளக் குடியேறாத வீடுகள், மற்றும் கோயில்கள் என்பவற்றில் திருடர்களின் தொல்லை மிக அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது

இரவு வேளைகளில் மேற்படி இடங்களில் உட்புகும் திருடர்கள் அங்கிருக்கும் குத்துவிளக்குகள், கதவுகள், ஓடுகள், வீட்டுத்தளபாடங்கள் என்பவற்றை அபகரிக்கின்றனர்.

இவ் இடங்களில் விழிப்புக் குழுவும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (108)

## குளவி கொட்டிக் காயம்

(ஊரெழு)

கட்டுவன் வைரவராலயப் பகுதியிலுள்ள பனைமரத்திலிருந்து விழுந்த குளவிக்கூட்டிலிருந்த குளவிகள் கொட்டியதால் - அதே இடத்தைச் சேர்ந்த இ.அருணகிரிராஜா (வயது 52) என்பவர் காயமடைந்தார்.

மேற்படி இடத்திலுள்ள பனந்தோப்பில் கருங்குளவிகள் கூடுகட்டியிருப்பதால் அப்பகுதியால் செல்லும் பயணிகள் அச்சத்துடனேயே பயணிக்கின்றனர். (96)

## காஸ் விலை அதிகரிக்கும்

ஷெல் காஸ் விலை அடுத்த வாரம் முதல் 50 ரூபாவால் அதிகரிக்கவுள்ளது. மத்திய கிழக்கு நிலவரம் மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பே இந்த விலை உயர்வுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

## விபத்தில் பெண் காயம்

(அரியாலை)

நேற்றுக்காலை நடைபெற்ற விபத்துச் சம்பவமொன்றில் - பெண்ணொருவர் காயமடைந்தார்.

பஸ் ஒன்றும், சைக்கிளும் மோதிக்கொண்ட இச்சம்பவத்தில் - நல்லூர் மூத்த விநாயகர் வீதியைச் சேர்ந்த ரகுநாதன் சுவர்ணராணி (வயது 48) என்பவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (55)

## கிளைக்குழுத் தேர்தல்

(புளியங்கூடல்)

ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின்-கிளைக் குழுத்தேர்தல் நாளை 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

மேற்படி கிளைக்குழுக் கூட்டம் கடந்த 12 ஆம் திகதி நடைபெற இருந்து- ஹர்த்தால் காரணமாக, பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (97)

## தலைமைக் காரியாலயம் புகுவிழா

(யாழ்ப்பாணம்)

பலாலிவீதி, கந்தர்மடத்தில் புதிதாக நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் புதிய தலைமைக் காரியாலயப் புகுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

பி.ப 3 மணிக்கு நல்லை ஆதினத்தில் அருளொளிக் கீர்த்தனை ஒலிநாடா வெளியீடும் நடைபெறவுள்ளது.

## "வசந்தம்" வெளியீட்டு விழா

(மல்லாகம்)

வலி.வடக்கு பிரதேச செயலக மாதாந்த வெளியீடான "வசந்தம்" சஞ்சிகை வெளியீட்டுவிழா செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(68)

## பொதுக்கூட்டம்

(நெல்லியடி)

வடமராட்சி கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான பொதுக்கூட்டம் 20 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து கத்தோலிக்க ஆசிரியர்களையும், மறையாசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (13)

## விழிப்புக்குழுக்கள் அமைப்பு

(ஊரெழு)

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அலுவலகர் பிரிவுகள் தோறும் விழிப்புக் குழு அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

கொலை,மற்றும் சமூகவிரோத செயல்கள் என்பவற்றை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இவை அமைக்கப்பட்டு வருகின்றன. (96)

## புதிய குரு திருநிலைப்படுத்தல்

ஊர்காவற்றுறை பங்கைச் சேர்ந்த அருட் சகோதரர் ஏ.சில்வெஸ்ரர் அமலமரித் தியாகிகள் சபையின் புதிய குருவாக மன்னார் புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நாளை திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

## உதைபந்தாட்டப் போட்டிகள்

புனித ஹென்றியரசர் கல்லூரி நடாத்தும் வருடாந்த சினேகபூர்வ உதைபந்தாட்டப்போட்டி இம்மாதம் 21ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

21ம் திகதி புனித பரியோவான் கல்லூரியுடனான ஆட்டம் புனித பரியோவான் கல்லூரி மைதானத்திலும், 23ம் திகதி மத்திய கல்லூரியுடனான ஆட்டமும் , 25ம் திகதி புனித பத்திரிசியார் கல்லூரியுடனான ஆட்டமும் ஹென்றியரசர் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (71)

## பாடசாலைக் கிணறுகள் புனரமைப்பு

(ஊரெழு)

யாழ்.மாவட்ட பாடசாலைகளிலுள்ள சேதமடைந்த கிணறுகள் ஐக்கிய நாடுகள் உதவித்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

முதற்கட்டமாக கிராமப்புறத்திலுள்ள 25பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு கிணறுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (96)

## இணைப்புக்கள் இதுவரை இல்லை

(காரைநகர்)

காரைநகர் தெற்கு உபஅஞ்சல் அலுவலகத்திற்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே தொலைத்தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்ட போதும்-அதற்கான இணைப்புக்கள் இதுவரை வழங்கப்படவில்லை என அஞ்சல் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இணைப்புகள் வழங்கப்படாமையினால் காரைநகர் பிரதேசத்தில் உள்ள மக்கள் வெளியிடங்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கு சிரமங்களை எதிர் கொள்கின்றனர். (52)




**18.10.2002 முதல் 24.10.2002 வரை**



### மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வபக்தி, தொழில் முன்னேற்றம், பணவரவு முதலிய நற்பலன்களுடன் ஆரம்பித்து வார நடுப்பகுதியில் தேகசுகக் குறைவு, தேவையற்ற செலவு, வீண்மனஸ்தாபங்களுடன் எடுத்த காரியம் தடை முதலிய தீய பலன்களும் இடம்பெறலாம். வார இறுதியில் பணவரவு, விருந்தினர் கொண்டாட்டம் முதலிய நற்பலன் இடம் பெறலாம். மாதா தேகசுகக் குறைவு, புத்திரர் சுகக்குறைவு, திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும். கணவன் மனைவியரிடையே நல்லுறவு குறைவு, பிதாவின் தேக சுகம் நன்று, தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சக உத்தியோகத்தர்களின் ஆதரவு கிட்டும், மாணவர்கட்கு கல்வி சமநிலை, வர்த்தகர்களுக்கு சிறந்த வாரமல்ல.



### இடபம்

**கார்த்திகை, 2,3,4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வபக்தி, தொழிற் சிறப்பு, இனசனமகிழ்ச்சி, நண்பர்கள் உறவு, அறுசுவையுண்டியினால் மகிழ்ச்சி முதலிய நற்பலன்களுடன் ஆரம்பித்து வார இறுதி நாட்களில் சிலசமயம் மனதில் கர்வநிலை வரலாம், வீண் மனஸ்தாபம், அயலில் மனஸ்தாபம்,தேகசுகக்குறைவு முதலிய தீய பலன்கள் இடம் பெறும். மாதா தேகசுகக் குறைவு. இதனால் வைத்தியச்செலவு இடம் பெறலாம். புத்திர தேகசுகம் நன்று, திருமணப் பேச்சு மந்தகதியில் முன்னேற்றமடையும். கணவன் மனைவி நல்லுறவு சிறப்பாக இருக்கும். பிதாவின் தேகசுகம் நன்று. தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சகஊழியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மாணவர்கள் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்தவாரம்.



### மிதுனம்

**மிருகசீரிடம் 3,4ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வ பக்தி, மன மகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், புத்தாடை அணிவதில் மகிழ்வு முதலிய நற்பலன்களுடன் அமையும். மாதா சுகம் மத்திமம், புத்திரர் சுகம் மத்திமம், திருமணப்பேச்சு சிறிது தாமதம் காட்டும். கணவன், மனைவி நல்லுறவு சிறப்பாக அமையும். பிதாவின் தேகசுகம் மத்திமம், மாணவர்கட்கு சிறந்த வாரம், வர்த்தகர்கட்கு சிறந்த வாரம்.



### கர்க்கடகம்

**புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**


இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு குறைவு, தொழில் மந்தநிலை, தேகசுகக் குறைவு முதலிய தீய பலன்களுடன் ஆரம்பித்து தெய்வ தரிசன பலன் சமய அறிஞர்கள் நல்லுறவு, தொழிற்சிறப்பு, மனமகிழ்ச்சி முதலிய நற்பலன்கள் இடம்பெறலாம். மாதாசுகம் மத்திமம், புத்திரர் சுகம் நன்று, திருமணப் பேச்சு முன்னேற்றமடையும். கணவன், மனைவி நல்லுறவு சிறப்பாக அமையும். பிதா தேகசுகக் குறைவு, மாணவர் கல்வி முன்னேற்றம் சமநிலையில் இருக்கும். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.



### சிங்கம்

**மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்த வாரமாக அமையும். பணவரவு, இனசனமகிழ்ச்சி, புத்தாடை அணிவதில் மகிழ்ச்சி, கலைநிகழ்ச்சியில் மகிழ்ச்சி, தெய்வ தரிசனம் முதலிய நற்பலன்களுடன் ஆரம்பித்து வார நடுப்பகுதியில் பணக் கஷ்டம், தேகசுகக்குறைவு, தேவையற்ற பிரச்சினையில் ஈடுபட்டு வீண் பழிகேட்டல் முதலிய தீயபலன்களும் இடம்பெறலாம். மாதாவிற்கு தேகசுகம் நன்று, புத்திரரால் செலவு, திருமணப்பேச்சு தாமதமடையும். கணவன் மனைவி நல்லுறவு சிறப்பாக இராது. பிதாவின் தேகசுகம் மத்திமம், மாணவர் கல்வியில் முன்னேற்றம் காட்டுவர், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம் அல்ல.



### கன்னி

**உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்தவாரமாக அமையும். பணவரவு, நோய்நீக்கம், தெய்வதரிசனம், வாகனபலன், பெண்கள் மகிழ்ச்சி, கலைநிகழ்ச்சி ரசனை முதலிய நற்பலன்களுடன் ஆரம்பித்து வார இறுதியில் தேகசுபம் சிறிது மந்தநிலையில் இருக்கும். மாதா தேகசுகம் நன்று, புத்திரர் சுகம், திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், கணவன் மனைவி உறவு சிறப்பாக அமையும், பிதா தேகசுகக் குறைவு, தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சக ஊழியர்களில் ஒத்துழைப்பு நன்று, மாணவர்கள் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.



### துலாம்

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பெரும்பாலும் நன்மைகள் கூடிய வாரமாக காணப்படுகின்றது. பணவரவு, மகிழ்ச்சி, தெய்வதரிசனம், விருந்துக்கொண்டாட்டம், கலை நிகழ்ச்சி ரசனை, ஆடை அணிவதில் மகிழ்ச்சி முதலிய நற்பலன்கள் கூடிய கர்வத்தினால் தேவையற்ற பிரச்சினைகளில் ஈடுபடுவதினால் வீண்பழி கேட்டல் முதலிய பலன் வார இறுதியில் நிகழலாம். மாதா தேகசுகம் நன்று, புத்திரர் தேவையற்ற பிரச்சினைகளில் ஈடுபடுவது. திருமணப்பேச்சு தாமதமடையும், கணவன் மனைவி சமம், பிதா தேகசுகம் நன்று, தொழில் முன்னேற்றம் சமம், தொழில் ஸ்தானத்தில் தொழில் சமநிலையில் இருக்கும். மாணவர்களுக்கு சிறந்த வாரமல்ல, வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.



### விருச்சிகம்

**விசாகம்- 4, அனுஷம், கேட்டை**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் சிறந்த நற்பலன்களுடன் கூடிய வாரமாகக் காணலாம். தெய்வதரிசனம், பண வரவு, நோய் நீக்கம், ஆடைஆபரண மகிழ்ச்சி, கலைநிகழ்ச்சி ரசனை முதலிய நற்பலன்களுடன் மாதாவின் தேகசுகம் மத்திமம், புத்திரசுகம் நன்று, திருமணப்பேச்சு முன்னேற்றமடையும், கணவன், மனைவி உறவு சமம். பிதாவின் தேகசுகம் மத்திமம், மாணவர் கல்வியில் முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்தவாரம் அல்ல.



### தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பெரும்பாலும் தீய பலன்கள் நிறைந்த வாரமாக காணப்படுகின்றது. பணவரவு குறைவு, தேகசுகக்குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, தேவையற்ற பயம், மற்றவர்கள் மீது சந்தேகம் முதலிய தீயபலன்களுடன் மாதாவின் தேக சுகம் நன்று, புத்திரர் சுகக்குறைவு, திருமணப் பேச்சு சற்று தாமதமடையும், பிதாவிற்கு தேகசுகக் குறைவு, இதனால் வைத்தியச் செலவுகள், தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் வெற்றிகரமாக இருக்கும். மாணவர்களுக்குச் சிறந்தவாரம், வர்த்தகர்களுக்குச் சிறந்தவாரம்.



### மகரம்

**உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தொழில் முன்னேற்றம், தெய்வதரிசனம், பணவரவு, மகிழ்ச்சி, ஆடையாபரண பலன் முதலிய நற்பலன்களுடன் ஆரம்பித்து மனச்சோர்வு, யாரையும் நம்பாத தன்மை, கடன் முதலிய தீயபலன்களுடன் மாதாசுகம் மத்திமம், புத்திரர் தேவையற்ற விடயங்களில் ஈடுபடுவது, திருமணப் பேச்சு தாமதம், கணவன் மனைவி உறவு சிறப்பு, பிதாவின் தேகசுகம் நன்று, தொழில் முன்னேற்றம் சமம், மாணவர் கல்வி முன்னேற்றம் சமம், வர்த்தகர்களுக்கு சிறந்தவாரம்.



### கும்பம்

**அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு, மகிழ்ச்சி, தெய்வதரிசனம், விருந்தினர் கொண்டாட்டம் முதலிய நற்பலன்களுடன் ஆரம்பித்து எடுத்த காரியம் தாமதம், வரவுக்கு மிஞ்சிய செலவு, தேகசுகக்குறைவு, வீண்வாக்குவாதம் முதலிய தீயபலன்களுடன் மாதா தேகசுகக் குறைவு, புத்திரர் சுபம், திருமணப் பேச்சு முன்னேற்றமடைதல், கணவன் மனைவி நல்லுறவு சமம், பிதாவின் தேகசுகம் மத்திமம், தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தானத்தில் சிறப்பு, மாணவர் கல்வி முன்னேற்றம், வர்த்தகர்களுக்கு சிறந்தவாரமல்ல.



### மீனம்

**புரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தெய்வதரிசனம், பணவரவு, மகிழ்ச்சி, விருந்தினர் வருகை, அறுசுவையுண்டி, புத்தாடை அணிவதில் மகிழ்ச்சி, கலைநிகழ்ச்சியில் ரசனை முதலிய நற்பலன்களுடன் மாதாவின் தேகசுகம் நன்று, புத்திரர் மகிழ்ச்சி, திருமணப் பேச்சு முன்னேற்றம், கணவன் மனைவி நல்லுறவு, பிதாவின் தேகசுகம் நன்று, தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் சிறப்பு, மாணவர் கல்வி முன்னேற்றம் சமம், வர்த்தகர்கட்கு சிறந்தவாரம்.

**யாழ். கொக்குவில்**
**இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின்**
**சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தென்மராட்சி மீள் குடியமர்வு நிதி 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் அண்மையில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்குவதற்கென பத்து மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி அண்மையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் பதினையாயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் யாழ். செயலகம் மேற்கொண்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் யாழ். செயலகத்திடம் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான கொடுப்பனவுக்காக மொத்தம் முப்பது மில்லியன் ரூபா மட்டும் கைவசம் உள்ளது. இந்த நிதியில் இருந்தே தென்மராட்சிப் பகுதிக்கு பத்து மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வற்றை விட மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு நான்கு மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ள பணம் குடாநாட்டின் ஏனைய பிரதேச செயலகங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிதி ஒதுக்கீடு குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவுகளை முழுமையாக வழங்குவதற்கு போதுமானதாக இல்லை. எனவே தற்போதுள்ள மேற்படி குறைந்த அளவு நிதியைப் பயன்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் எவ்வாறு கொடுப்பனவுகளை வழங்கலாம் என்பதை பிரதேசமட்டத்தில் தீர்மானம் எடுத்து செயற்படும்படி அனைத்துப் பிரதேச செயலகங்களையும் யாழ்.செயலகம் கேட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அனைத்து பிரதேச செயலகங்களும் இவ்விடயத்தில் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. (க)

## கைப்பை விவகாரம்
# மூன்று ஊடகங்கள் மீது ஜனாதிபதி சட்ட நடிவடிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா- அமைச்சரவைக்கு புலனாய்வுக் கமெரா அடங்கிய கைப்பையைக் கொண்டு வந்தார் என அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறிய தகவலை வெளியிட்ட மூன்று ஊடகங்கள் மீது ஜனாதிபதி சந்திரிகா சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளார்.

நேற்றுக்காலை இது தொடர்பாக இடம் பெற்ற கூட்டத்தில் 15 சட்டத்தரணிகள் பங்குகொண்டிருந்தனர். கூட்டத்தின் முடிவில் மூன்று ஊடகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# தொலை பேசி பரிவர்த்தனை நிலையம் சுன்னாகத்தில் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் புதிய தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேற்படி பகுதியின் தொலைபேசி பாவனையாளர்களின் வசதி கருதி இப்புதிய பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தாம் எடுத்து வருவதாக ரெலிகொம் நிறுவனத்தின் யாழ் பிராந்திய முகாமையாளர் எஸ். அன்ரன்ராஜா தெரிவித்தார்

இப்பகுதியில் அமைக்கப்படவிருக்கும் புதிய பரிவர்த்தனை நிலையத்துக்கு கட்டிடம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. அத்துடன் இப்பரிவர்த்தனை நிலையத்துக்கென தனியான தொலைபேசிக் கோபுரம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இப்புதிய பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டதும் மேற்படி பகுதியில் உள்ள வாடிக்கையாளர்களுக்குத் தேவையான தொலைபேசி இணைப்புக்களை சிரமமின்றி வழங்க முடியும் என்றும் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (க)

## நாடாளுமன்ற...

அரசின் பலம் போதாமல் உள்ளது. பல கூட்டுக் கட்சிகளை நம்பியே அரசின் ஸ்திரத்தன்மை உள்ளது. அரசின் உறுதிப்பாட்டைப் பேண இக்கட்சிகளின் அழுத்தங்களுக்கெல்லாம் இசைந்து செல்ல வேண்டியுள்ளது. இதனால் இனப்பிரச்சினை விவகாரத்திலோ வேறு எந்த விடயங்களிலோ அரசு உறுதியான ஓர் முடிவை எடுக்க முடியாமல் உள்ளதாக பிரதமர் ரணில் சுட்டிக்காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய தேர்தல் ஒன்றை நடத்த உத்தரவிட்டால் கடந்த முறையை விட இனிக் கூடுதலான - அமோக ஆதரவை பெற்றுக்கொள்ள முடியும் எனப் பிரதமர் நம்புகின்றார். கடந்த தேர்தலின்போது வன்னி மக்களும் கிழக்கின் சில பகுதிகளைச் சேர்ந்தவர்களும் வாக்களிக்க முடியாது தடுக்கப்பட்டனர்.

புதிய தேர்தலில் இவர்களது ஆதரவு வாக்கு தமக்குப் பெருமளவு கிடைக்கும் எனப் பிரதமர் உறுதியாக நம்புகிறார். இந்த அமோக ஆதரவு வருங்காலத்தில் உறுதியான தீர்மானங்களை அரசு எடுக்க உதவும் எனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுடன் நடத்தப்படும் தாய்லாந்து பேச்சுகளின்போது எடுக்கப்படும் சில முடிவுகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற இத்தகைய பெரும்பான்மைப் பலம் தேவை எனப் பிரதமர் ரணில் கருதுவதாக அமைச்சரவை வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே 19ஆவது அரசியல் சீர்திருத்தத்தின் சில சரத்துக்கள் தொடர்பாக பொதுமக்களின் ஆணை கேட்டு செல்வதை விட, பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தவே அரசு விரும்புகிறது என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று அமைச்சரவைக் கூட்டத்தையடுத்து நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய பீரிஸ்- அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்காக மக்களிடம் செல்வதைவிட பொதுத் தேர்தலை நடத்தினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை மக்கள் தருவர் என நம்பிக்கை தெரிவித்தார். எனினும் பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## திருமாவளவன்...

நாளை சனிக்கிழமை ஆரம்பித்து நான்கு தினங்களுக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்தில் கலை, இலக்கியங்கள், ஊடகங்கள் வகித்த பங்கும் இனி வகிக்க வேண்டிய பங்களிப்புப் பற்றியும் ஆராயப்படவுள்ளது. இம் மாநாட்டில் கட்டுரையாளர்கள், பேராளர்கள், பார்வையாளர்களாக பங்கேற்க இலங்கையின் சகல பகுதிகளிலும் இருந்து ஏராளமானோர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர். யாழ். மாவட்டத்திற்கு வெளியே இருந்தும் இன்றும் ஏராளமானோர் வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ், சிங்கள, இஸ்லாமிய படைப்பாளிகளும் ஊடகவியலாளர்களும் சங்கமிக்கும் இத 'தமிழ்க் கூடல் 2002'தினமும் புதிய நேரப்படி காலை 9 மணியில் இருந்து இரவு 8 மணி வரை பல்வேறு அமர்வுகளாக இடம் பெறவுள்ளது. ஆய்வுரை, குறிப்புரை, சிறப்புரைகளின் பின்னர் தினமும் ஈழத்தமிழர்களின் பாரம்பரியத்தை, போரட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மட்டக்களப்பு - வன்னி - யாழ்ப்பாண மாவட்டக் கலைஞர்கள் பங்கேற்கும் நாடகங்களும் அரங்கேற உள்ளன.



கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் ஆகியோரைச் சந்தித்த ஐரோப்பிய யூனியன் குழுவினர்.

# பதற்ற நிலையை போக்க புலிகள் - பொலிசார் நடவடிக்கை
## அக்கரைப்பற்றில் ஊரடங்கு தொடர்கின்றது

(கல்முனையில் இருந்து சலீம்)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பகுதியில் தொடர்ந்தும் தமிழ்- முஸ்லிம் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவி வருகின்றது.

இதனால் நேற்றுக்காலை ஆறுமணிக்குத் தளர்த்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் மீண்டும் மாலை 3 மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் இணைந்து பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸாருடன் இணைந்து விடுதலைப்புலிகள், பதற்றநிலை வேறு பகுதிகளுக்குப் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். ஹர்த்தால், கடையடைப்புப் போரட்டங்களை நடத்த வேண்டாம் என இவர்கள் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்திருந்தனர்.

இருந்த போதிலும் அக்கரைப்பற்றுப் பகுதியில் நேற்றும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துக்கள் யாவும் செயலிழந்திருந்தன.

இதே வேளை புலிகளின் பெயரில் சில தீயசக்திகள் செயற்பட்டு தமிழ்- முஸ்லிம் உறவைச் சீர் குலைக்க முனைவதாகவும் பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் விடுதலை புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## தமிழ்க்...

ஆராயப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்புக்கான அனுமதியை கூட்டமைப்பினர் எதிர்பார்த்திருப்பதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்களிலிருந்து மேலும் தெரியவருகிறது.

## யாழ். மாவட்ட...

பாதிப்படைந்துள்ளன.

எனவே இவ்வாண்டு முடிவடைவதற்கு முன்னதாக உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்யவென 106 மில்லியன் ரூபா நேரடி உதவியாகக் கோரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் ஏனைய கல்வித் தேவைகளுக்குமென 20 மில்லியன் ரூபாவும்,

மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளைச் சீரமைக்க 20 மில்லியன் ரூபாவும்,

அவசர வீதித் திருத்தங்களை மேற்கொள்வதற்கு 15 மில்லியன் ரூபாவும்,

மின்சார திருத்த வேலைகளுக்கெனவும் புதிய மின்னிணைப்புக்களை வழங்குவதற்காகவும் 30 மில்லியன் ரூபாவும்,

மாவட்டத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கென 7 மில்லியன் ரூபாவும்,

விவசாயத்துறைக்கென 6 மில்லியன் ரூபாவும் தேவையென கோரப்பட்டுள்ளது.

நேற்று மதியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது இது தொடர்பான எழுத்து மூலக் கடிதமும் என்னால் சமர்ப்பிக்கப்பட்டது.

வரும் திங்கட்கிழமையன்று நிதியமைச்சில் நிதியமைச்சர் சொக்ஸி, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், நிதி ஆலோசகர் பாஸ்கரலிங்கம் ஆகியோருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொள்ளும் கூட்டத்தில் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

இதைவிட யாழ். மாவட்டத்தின் போக்குவரத்துத் தேவைக்கென 6 சொகுசு பஸ்களுட்பட 60 பஸ்களை தந்துதவுமாறு விடுத்த வேண்டுகோளை பிரதமர் ஏற்றுக் கொண்டார் என்றும் அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

# நாணயமாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 95.98 | 96.40 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 148.58 | 149.85 |
| 1யூரோ | 93.57 | 94.63 |
| 1சுவிஸ் பிராங் | 63.72 | 64.68 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 52.28 | 53.23 |
| 1ஜப்பானிய யென் | 00.76 | 00.77 |
| 1சவூதி றியால் | 25.66 | 25.66 |

# 32 ஷெல்கள் மீசாலையில் மீட்க மக்களை விலகி இருக்க கோரிக்கை

(சரசாலை)

மீசாலை வாகையடிச்சந்திக்கு அருகில் சின்னமண்டுவில் உள்ள காணி ஒன்றில் 32 ஷெல்கள் புதைந்த நிலையில் காணப்படுகின்றன. , இதுகுறித்து படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை இந்த ஷெல்கள் படையினரால் மீட்கப்படவுள்ளன. இதையொட்டி இன்றுபகல் இப்பகுதி மக்களை 500மீற்றர்களுக்கு அப்பால் விலகி இருக்குமாறு இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். (34)

# தொழிலுக்கு சென்ற மீனவர் மீது படைச்சிப்பாய் தாக்குதல்
## மனநிலை பாதிப்புற்றவராம்!

கற்கோவளம் பகுதியில் மீன்பிடித்தொழிலுக்குச் சென்ற இரு மீனவர்கள் படைச்சிப்பாய் ஒருவரினால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர். அப்புத்துரை தயாளன் (22) தங்க வடிவேல் சுதன் (22) ஆகியோரே தாக்குதலில் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய் காலை 10.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் குறித்து மீனவசங்கத் தலைவர் ச.அழகராஜா சம்பந்தப்பட்ட இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியை சந்தித்து நடந்த சம்பவம் குறித்து முறையீடு செய்தார். இதன் போது அம்முகாம் பொறுப்பதிகாரி, தாக்குதல் நடத்திய படைச்சிப்பாய் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் சம்பவத்திற்காக தாம் மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்தார்.

# உண்மை அறிய ரணிலின் பிரதிநிதி திருமலை பயணம்!

(திருமலை)

திருகோணமலையில் அண்மையில் நடந்த அசம்பாவிதங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு நெருக்கமான பிரமுகர் ஒருவரை நியமித்துள்ளார். இவர் நேற்று திருமலை வந்து சேர்ந்தார்.

திருமலை சம்பவங்கள் குறித்து அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் ஜோன் அமரதுங்க ஆகியோர் சமர்ப்பித்த அறிக்கைக்ளில் வேறுபாடுகள் காணப்பட்டதையடுத்து பிரதமர் தனது பிரதிநிதி ஒருவரை திருமலைக்கு தற்போது அனுப்பி வைத்துள்ளார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.